
மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்


மலர் 8 • இதழ் 1 • ஜூலை 2023 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

எண்ணங்கள்

## ஈடுபாடு

### சிறப்பிதழ்




Choose Classic...
Flaunt Charisma
SALUTE SANGEETH
RAMRAJ
DHOTIS • KURTAS • SHIRTS
Culture India™
CORPORATE ENQUIRY
DISTRIBUTOR ENQUIRY
FRANCHISE ENQUIRY
SCAN QR CODE FOR STORE LOCATION
Available at Ramraj Cotton Showrooms and All Leading Textile Shops shop online @ www.ramrajcotton.in

மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்
RAMRAJ
40 YEARS OF TRADITION WOVEN BY TRUST

வேலை, தொழில், வியாபாரம் என்று எதிலும் ஈடுபாடு காட்டி உழைக்கும் வழிகளைச் சொல்லி வாழ்வில் பெரும் வெற்றிகளைச் சாதிக்க உதவும்

# ஈடுபாடு

## சிறப்பிதழ்

என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம்.



# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

வாழ்வில் எப்போதும் சுவாரசியம் குறையாமல் இருக்க வேண்டுமெனில், நாம் செய்யும் செயல்களில் ஈடுபாட்டு உணர்வு இருக்க வேண்டும். பணம், பெயர், புகழ் மற்றும் வேறு எந்த எதிர்பார்ப்புகளோ இல்லாமல் ஒரு செயலில் நம்மால் ஈடுபாடு கொள்ள முடியுமென்றால், அது தருகிற மகிழ்ச்சிக்கு ஈடு கிடையாது. சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்கள் பகிர்ந்த ஒரு அனுபவத்தைப் படித்தேன். சிறிய செயலாக இருந்தாலும் ஈடுபாடு கொண்டு அதைச் செய்வதன் அவசியத்தை அது உணர்த்தியது.

சென்னையின் சாலையோரப் புத்தகக் கடையில் ஒரு முதியவர், குழந்தைகளுக்கான புத்தகங்களைத் தேடி வாங்கிக்கொண்டிருந்தார். அக்கறையுடன் புத்தகங்களைத் தேடி எடுத்துக்கொண்டிருந்தவரிடம், “யாருக்காக இவற்றை வாங்குகிறீர்கள்?” என எழுத்தாளர் கேட்டிருக்கிறார். “என்னுடைய பேரனுக்குத் தினமும் புத்தகம் படித்துக் காட்டுகிறேன். அதற்காகத்தான் இந்தப் புத்தகங்களை வாங்குகிறேன்” என்று பதில் சொல்லி இருக்கிறார் முதியவர்.

“வெளிநாட்டில் வாழ்கிற என் மகனின் குழந்தைக்கு எட்டு வயதாகிறது. வீட்டில் தமிழ் பேசுவதைத் தவிர வேறு வாய்ப்பில்லாத காரணத்தால் பேரனுக்குத் தமிழ் எழுதப் படிக்கத் தெரியவில்லை. அதனால் தினமும் ஒரு மணி நேரம் நான் அவனுக்குத் தமிழ்ப் புத்தகங்களைப் படித்துக் காட்டுகிறேன். பெரும்பாலும் குழந்தைகளுக்கான கதைகளைச் சொல்கிறேன். இந்தச் செயல் பேரனுடன் பேசுவதற்கும், அவனைப் புரிந்துகொள்ளவும் எனக்குப் பெரிய அளவில் பயன்படுகிறது.

இந்தக் கதைகளைப் படிக்கப் படிக்க, நானே குழந்தையாகிப் போன மகிழ்ச்சியும் கிடைக்கிறது. இதற்காகவே புதிய தொழில்நுட்பங்களை ஆர்வத்துடன் கற்றுக் கொள்கிறேன். ஸ்கைப் வீடியோ மூலம் தினமும் பேரனுடன் உரையாடுகிறேன்.

கேமரா முன்பு அமர்ந்து பேரனுக்குப் புரிகிற அளவில் கதை சொல்ல, நான் தினமும் பயிற்சி எடுத்துக்கொள்கிறேன். பேரனும் ஒரு வருடத்தில் இப்போது நன்றாகத் தமிழ் பேசுகிறான். பணியில் இருந்து ஓய்வுபெற்று வீட்டில் இருக்கும் எனக்கும் இது ஆக்கப்பூர்வமான செயல்பாடாக இருக்கிறது.

கதைகளில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக இன்னும் சென்று விடுகதை, பழமொழிகள், இலக்கியப் பாடல்கள் போன்றவற்றை விளக்கி சொல்லித் தருகிறேன். எந்தக் காரணம் கொண்டும் என் பேரன் வீட்டில் தமிழ் பேசுவது நின்று போகக்கூடாது. அதற்காக என்னாலான சிறிய முயற்சி இது. விருப்பத்தோடு செய்து கொண்டிருக்கிறேன்” என்று எழுத்தாளரிடம் சொல்லியிருக்கிறார் பெரியவர்.

ஒரு தாத்தாவின் ஈடுபாடு, தமிழை அடுத்த தலைமுறையிடம் கொண்டு சேர்க்கிறது. தலைமுறை இடைவெளியைக் குறைக்கிறது. எங்கோ வெளிநாட்டில் வசிக்கிற பேரனோடு உறவாட, தொழில்நுட்பத்தைக் கற்றுக்கொள்ள அவரால் முடிகிறது. அந்த ஒரு மணி நேரத்தைச் சிறந்த அனுபவமாக மாற்ற அவர் சிறந்த நூல்களைத் தேடி வாங்குறார். ஏதோ சொல்ல வேண்டும் என்று இருந்துவிடாமல், வீடியோ கால் மூலம் பேசுவதற்கு முன்பு பயிற்சி மேற்கொள்கிறார். ஒரு மணி நேரம் செய்யப் போகிற அந்தச் செயல் சிறப்பாக வர அவர் காட்டும் ஈடுபாடுதான் அந்த எட்டு வயது குழந்தையை அழகு தமிழைப் பழக வைக்கிறது. இதுதான் ஈடுபாட்டு உணர்வுக்குக் கிடைக்கும் பலன்.

‘லட்சியம் உள்ளவர்கள் வாழ்வில் பெறுகிறார்கள்’ என்பது கற்பனை. தமது லட்சியத்தை அடைய ஈடுபாட்டுடன் உழைப்பவர்களே வெற்றி பெறுகிறார்கள். ஈடுபாடு இல்லாத லட்சியம் பகல் கனவு. கண்களைத் திறந்தால் காணாமல் போகும்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனம் நாற்பது ஆண்டுகளைக் கடந்து லட்சியத்துடன் தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்கிறது. தொழிலில் ஈடுபடுகிற எல்லோருக்கும் தலைசிறந்த நிறுவனமாக வளர வேண்டும் என்கிற லட்சியம் இருக்கும். ஆனால், அது நிறைவேற வேண்டுமெனில் நிறுவனர் மட்டுமே ஈடுபாட்டோடு உழைத்தால் வெற்றி கிடைக்காது. நிறுவனத்தில் பணிபுரிகிற அனைவரும் ஒரே சிந்தனையுடன் உழைக்கிறபோதுதான் லட்சியத்தை நிறைவேற்ற முடியும்.

‘வாடிக்கையாளர்களுக்குத் தரமான தயாரிப்புகளை வழங்க வேண்டும்’ என்கிற நிறுவனத்தின் லட்சியத்தைத் தங்களுடைய இதயத்தில் சுமந்து கடந்த நாற்பது ஆண்டுகளாக என்னோடு கைகோர்த்து ஒத்திசைவுடன் உழைக்கிற பணியாளர்கள் இருக்கிறார்கள். 30 ஆண்டுகள், 25 ஆண்டுகள், 20 ஆண்டுகள், 15 ஆண்டுகள் எனத் தொடர்ந்து ராம்ராஜ் நிறுவனத்தில் பயணிக்கிறவர்களுக்கு நன்றி தெரிவித்து ஒரு பாராட்டுக் கடிதம் எழுதினேன். அதை எழுதுகிறபோது அவர்கள் ஒவ்வொருவரின் அர்ப்பணிப்பு உணர்வையும், கடின உழைப்பையும் நினைத்து நெகிழ்ந்து போனேன்.



தொழில் பக்தியும், ஈடுபாட்டுடன் கூடிய உழைப்பும் எங்களைப் பிணைக்கிறது. 40 ஆண்டுகளுக்கு முன்பு தனிநபராக வேட்டி விற்பனையைத் தொடங்கியபோது எனக்கு இருந்த ஈடுபாடு, நாளடைவில் பல மடங்கு அதிகரிக்கவே செய்திருக்கிறது. 'செய்த வேலையையே திரும்பத் திரும்ப செய்கிறோம்' என்று ஒருமுறைகூடத் தோன்றியதில்லை. இந்த வேலையில் இன்னும் என்ன புதுமை செய்யலாம் என்கிற உந்துதலே தொடர்ந்து வழிநடத்துகிறது. நம்பிக்கையோடு ராம்ராஜ் காட்டன் தயாரிப்புகளை வாங்கும் வாடிக்கையாளர்கள் மனநிறைவு கொள்வதற்கு உழைக்க வேண்டும் என்பதையே பணியாளர்களுக்குச் சொல்லுவேன்.

ஒரு பொருளை விற்பது மட்டுமே நமது நோக்கமாக இருந்தால், அன்று வெற்றிகரமாக வியாபாரம் செய்துவிடமுடியும். ஆனால், பொருள் தரமாக இல்லாமல் போனால் அந்த வாடிக்கையாளர் மறுபடியும் கடைக்கு வரமாட்டார். ஒவ்வொருவரையும் நிரந்தர வாடிக்கையாளராக மாற்றுவதற்குத் தரமே அடிப்படையாக இருக்கும். தரமான பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்ய வேண்டும் என்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவேன். நமது தயாரிப்புகள் வாடிக்கையாளர்களை மதிப்புக்குரியவர்களாக உணரச் செய்ய வேண்டும். 'ஆண்டு வருமானத்தை வைத்து நிறுவனத்தின் வளர்ச்சியை அளவிடுவதைவிட, வாடிக்கையாளரின் மனநிறைவை வைத்து மதிப்பிடுவதே பொருத்தமானது' என்பது என் நம்பிக்கை.

'நெசவாளர்கள் வாழ்வு மேம்பட நாம் உழைக்கிறோம்' என்கிற எண்ணத்தை எனக்குள் வளர்த்துக் கொண்டதால் எனக்குள் தொழில் மீது ஈடுபாடும் வளர்ந்துகொண்டே வந்தது. ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தில் பணிபுரிகிற ஒவ்வொருவருக்கும் இந்த எண்ணம் அவர்களின் செயலில் பிரதிபலிக்க வேண்டும் என விரும்பினேன். ஈடுபாடு கொண்டு உழைக்கிறவர்களின் வளர்ச்சியில் நிறுவனம் துணைநிற்கும். நிறுவனத்தின் வளர்ச்சியில் அவர்களின் பங்களிப்பு இருக்கும்.

15 ஆண்டுகளுக்கு ஒருமுறை தலைமுறை மாற்றம் நிகழும் என்கிறார்கள். அப்படிப் பார்த்தால் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர்கள் இப்போது ராம்ராஜ் நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர். இது உறவுக்கும் மேலான பந்தம். இது தொடரவும் செழித்து வளரவும் தொழிலில் இருக்கும் ஈடுபாட்டு உணர்வே வேராக இருக்கிறது. எந்த வேலையிலும் அர்ப்பணிப்போடு ஈடுபட்டால் மகிழ்ச்சியும் வளர்ச்சியும் நிச்சயம் என்பதை இம்மாத 'வெண்மை எண்ணங்கள்' இதழ், வாசகர்களுக்கு உணர்த்தும்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்**

# ஏற்பாரு இருப்பதை



தச்சுத் தொழில் செய்துவந்த ஏழை ஒருவன் இருந்தான். தன் குறைந்த வருமானத்தில் வாழ்க்கை நடத்தி வந்தான். தினம் தினம் பற்றாக்குறை. சம்பாதிக்கும் பணத்தில் அவனும் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் பசியாறுவதே கடினமாக இருந்த சூழல்.

ஒரு நாள் தெருவில் நடந்துபோன போது பழங்கால நாணயம் ஒன்று அவனுக்குக் கிடைத்தது. அந்த நாணயத்தின் நடுவில் ஒரு ஓட்டை இருந்தது. 'அந்தக் கால நாணயங்கள் இப்படி துளையிட்டதாக இருக்கும். இப்படிப்பட்ட ஓட்டை நாணயம் கிடைப்பது அதிர்ஷ்டம்' என்று அவனது நண்பரான ஜோசியர் ஒருவர் அவனிடம் ஏற்கனவே சொல்லியிருந்தார். எனவே அவன், 'இனி அதிர்ஷ்டம் என்னைத் தேடி வரும். நான் பணக்காரனாகி விடுவேன்' என்று நினைத்தான். அந்த நாணயத்தைத் தன் பாக்கெட்டில் போட்டுக்கொண்டான்.

அன்று அவனுக்கு மற்ற நாட்களைவிட அதிக வேலையும் சற்றே கூடுதலான வருமானமும் கிடைத்தது. 'எல்லாம் இந்த நாணயம் கிடைத்த நேரம்' என நம்பினான். வீட்டுக்குப் போனதும் மனைவியிடம் இதைச் சொன்னவன், ஒரு பழைய பட்டுத்துண்டில் அழகிய பை மாதிரிச் செய்து, அதற்குள் பத்திரமாக இந்த நாணயத்தை வைத்தான். அவனது தச்சுக் கருவிகளுடன் இந்தப் பையும் இருக்கும். தினமும் தொழிலுக்குக் கிளம்பும்முன் அதைத் தொட்டுப் பார்த்துக்கொள்வான். வெளியே எடுக்க மாட்டான்.

சில மாதங்களில் அவன் வருமானம் பெருகியது. அதுவரை கூலி வேலை செய்துகொண்டிருந்தவன், சிலரிடம் கடன் வாங்கி, சொந்தமாகப் பட்டறை வைத்தான். அவனது தொழில் நேர்த்தி பார்த்து வெளியூர்களிலிருந்தும் வாய்ப்புகள் வந்தன. இதையெல்லாம் செய்ய பணியாளர்கள் பலரை நியமித்தான். அப்படியே அவன் உருவாக்கும் பொருட்களை விற்க ஒரு கடை திறந்தான். சில ஆண்டுகளில் பக்கத்து நகரங்களிலும் கிளைகள் திறந்தான். சில ஆண்டுகளில் அவன் அந்த நகரிலேயே அதிகம் சம்பாதிக்கும் தொழிலதிபர்களில் ஒருவனாக மாறிவிட்டான்..

ஒரு விடுமுறை நாளில் ஓய்வாக உட்கார்ந்து மனைவி, பிள்ளைகளுடன் தன் வாழ்க்கை பற்றிப் பேசிக்கொண்டிருந்தவன், "அந்த ஓட்டை நாணயம் என்னை விட்டு ஒரு கணம் கூடப் பிரிந்ததில்லை. அது தந்த அதிர்ஷ்டம்தான் எல்லாமே! பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் அதைப் பார்க்கப் போகிறேன்" என்றவாறு பட்டுப் பையிலிருந்து எடுத்தவனுக்கு அதிர்ச்சி. அதில் இருந்த நாணயத்தில் ஓட்டையே இல்லை.

"என்ன ஆயிற்று?" என்று குழப்பத்துடன் மனைவியைப் பார்த்தான்.

அவன் மனைவி தயக்கத்தோடு, "என்னை மன்னித்து விடுங்கள். அந்த பட்டுப்பை அழுக்காக உள்ளதே எனத் துவைப்பதற்காக எடுத்து வெளியே உதறினேன். நாணயம் தெருவில் விழுந்துவிட்டது. எவ்வளவோ தேடியும் கிடைக்கவில்லை. நான்தான் அதே மாதிரி இருக்கும் வேறு ஒரு சாதாரண காசைப் போட்டு வைத்தேன்" என்றாள்.

"இது எப்போது நடந்தது?" என்று கேட்டான் அவன்.

"அந்தக் காசு கிடைத்த ஒரு வாரத்தில்" என்றாள்.

அவன் அமைதியாகச் சிந்தித்தான். 'ஆரம்பத்தில் எப்படியாவது கொஞ்சம்

# இப்படி உணரலாம்!



வருமானம் வந்தால் போதும் என உழைத்தேன், அப்போது எந்த ஈடுபாடும் இல்லாமல்தான் வேலை செய்தேன். எப்போது என் தொழிலில் அக்கறையும் ஈடுபாடும் காட்ட ஆரம்பித்தேனோ, அப்போதுதான் என் வாழ்க்கை மாறியது. உண்மையில் அதிர்ஷ்டத்தைக் கொடுத்தது அந்த நாணயம் இல்லை. என்னுடைய ஈடுபாடும் உழைப்பும்தான்' என உணர்ந்தான். முன்பைவிட உற்சாகத்துடன் தனது பணியைத் தொடர்ந்தான்.

ஒருவர் செய்யும் வேலை, தொழில் அல்லது வியாபாரத்தில் அவருக்கு ஈடுபாடு என்பது எங்கிருந்து உருவாகிறது? கோபம், எரிச்சல், துயரம், பயம், விரக்தி போன்ற எதிர்மறை உணர்வுகளிலிருந்து அது உருவாக முடியாது. நேர்மறையான உணர்வுகளே ஈடுபாட்டை உருவாக்கும்.

உதாரணமாக ஒரு மனிதரை எடுத்துக்கொள்வோம். அவர் தினமும் அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து தயாராகி, ரயிலில் ஏறி ஒரு பெருநகரத்துக்கு வருகிறார். ஒன்பது மணிக்கு அங்கு இறங்கி, பஸ் பிடித்து, தான் வேலை செய்யும் இடத்துக்கு பத்து மணிக்குப் போகிறார். மாலை ஏழு மணிக்கு வேலையை முடித்துவிட்டு இரவு பத்து மணிக்கு வீடு திரும்புகிறார். தினம் தினம் இதேபோன்ற பயணம், வாரத்தில் ஆறு நாட்களுக்கு என்று வருடம் முழுக்க வேலை.

இதை அவர் எப்படிப்பட்ட உணர்வுடன் செய்கிறார் என்பதே அவர் வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது. 'என் தலையெழுத்து இப்படி அலையும்படி ஆகிவிட்டதே' என்ற விரக்தியுடன் அவர் இந்த வேலையைச் செய்யலாம். 'இதைவிட்டாலும் எனக்குப் பிழைப்புக்கு வேறு வழியில்லை' என்று நினைத்து வேலை செய்யலாம். 'குடும்பத்துக்காக இதைச் செய்தாக வேண்டும். இதுவும் இல்லையென்றால் ரோட்டில்தான் நிற்க வேண்டியிருக்கும்' என்ற பயம் அவரை வேலை செய்ய வைக்கலாம். குடும்பத்துக்கு வசதி இல்லாததால் இப்படி ஆகிவிட்டது, சரியாகப் படிக்காததால் இந்த நிலை, நம் ஊரில் சரியான வாய்ப்புகள் இல்லாததால் இந்த அலைச்சல் என்று ஏதேதோ காரணங்களைக் கற்பித்துக்கொண்டு அவர் நிம்மதியை இழக்கலாம். இந்த எதுவுமே அவர் வளர்ச்சிக்கு உதவாது.

தான் செய்யும் பணியில் ஈடுபாடு கொண்ட இன்னொரு மனிதர் இதையே வேறுவிதமாகச் செய்வார். புலம்பலோ, எரிச்சலோ இல்லாமல் அவர் தினம் தினம் வேலைக்குக் கிளம்புவார். பயண நேரத்தையும் பயனுள்ள வழியில் பயன்படுத்திக்கொள்வார். 'வேறு வழியில்லாமல் இந்த வேலையைச் செய்கிறேன்' என்ற உணர்வே அவருக்கு இருக்காது. 'இதைச் செய்வது என் வாழ்க்கைக்கு எப்படி உதவுகிறது. இதைத் திறமையாகச் செய்து நன்கு கற்றுக்கொண்டால் நமக்கு எப்படிப்பட்ட உயர்வுகள் கிடைக்கும்' என்றெல்லாம்தான் அவர் சிந்தனை ஓடும்.

அந்த வேலையை அவர் தினம் தினம் ஒரே மாதிரி செய்யாமல், அதில் வித்தியாசங்கள் காட்டுவார். அதை இன்னும் எளிமையாகவும் சிறப்பாகவும் செய்வதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பார். அதுவே அவரை மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்தி இன்னும் உயரத்துக்குக் கொண்டு சென்றுவிடும்.

இரும்பை வேறு எந்தப் பொருளாலும் அழித்துவிட முடியாது. துருப்பிடித்து அது தானாகவே அழிந்தால்தான் உண்டு. மனிதர்களுக்கும் இதுதான் இயல்பு! நம் சிந்தனை சிதைந்து நாமாகவே அழிந்தால்தான் உண்டு. நாம் உறுதியாக நின்றுவிட்டால் எதுவும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. ஈடுபாட்டுடன் உழைத்து உயர்வோம். ●

# கதை நேரம்



ஒரு நோயாளி ஜன்னலோரம் பார்த்தபடி படுக்கையில் சாய்ந்து படுத்திருப்பான். அறையில் அவனை அடுத்த தடுப்புக்கு அந்தப் பக்கம் படுக்கையில் கிடந்தவன், கொடிய நோயால் பாதிக்கப்பட்டு விரக்தியில் எழுந்திருக்க முடியாதபடி படுத்திருந்தான்.

முதல் நோயாளி அவனோடு பேச்சுக் கொடுப்பான். நடமாட முடியாத இரண்டாம் நோயாளியைப் பேச்சால் உற்சாகப்படுத்துவான். ஜன்னலுக்கு வெளியே தெரியும் பூந்தோட்டத்தையும், வீதியில் விரையும் வாகனங்களையும், பள்ளிக்குத் துள்ளியோடும் மாணவர்களையும் பற்றி வர்ணிப்பான். அதையெல்லாம் கேட்கக் கேட்க, படுத்துக் கிடந்த நோயாளிக்கு வாழும் ஆசை வந்தது. கொஞ்சம் கொஞ்சமாகத் தேறி உட்கார ஆரம்பித்தான்.

அந்த நேரத்தில் ஜன்னலோரத்து முதல் நோயாளி இறந்துவிட்டான். இரண்டாம் நோயாளிக்கு சோகம். என்றாலும் தன்னை அந்த முதல் படுக்கைக்கு மாற்ற முடியுமா என்று கேட்டான். அவனை ஜன்னலோரப் படுக்கைக்கு மாற்றினர். ஆசை ஆசையாக ஜன்னல் வழியே வெளியே பார்த்தான். அவனுக்கு ஏமாற்றம் காத்திருந்தது. வெளியே பூங்கா இல்லை, சாலை இல்லை, அவன் வர்ணித்த எதுவுமே இல்லை. ஒரு சுவர் மட்டுமே இருந்தது. இத்தனை நாட்கள் முதல் நோயாளி பொய் சொல்லிவிட்டானே என்று வருத்தத்துடன் நர்ஸிடம் இவன் முறையிட்டான்.

அவள் சிரித்தபடி சொன்னாள், "அவனால் எதையுமே பார்க்க முடியாது. ஏனெனில், அவனுக்கு இரு கண்களுமே கிடையாது." நோயாளி அதிர்ந்து, "பிறகு அவன் ஏன் பொய் சொன்னான்?" என்றான். "உனக்கு வாழ்க்கையின் மீது ஈடுபாடு வருவதற்காக, உனக்கு நம்பிக்கை ஊட்டி நலமாக்குவதற்காகச் சொன்னான்" என்றாள்.

இரு விழிகளிலும் ஒளியில்லாதபோதும் பிறர் வாழ்வில் ஒளியேற்ற முடிந்தது அவனால்!

வெளியூர் செல்வதற்காக வாடகை காரில் ஏறி அமர்ந்தார் ஒருவர். பெரும்பாலான டாக்சிகள் போல அது அழுக்காக இல்லை. உள்ளே சுத்தமாகத் துடைத்து தரையில் விரிப்புகள் போடப்பட்டிருந்தன. தூய வெள்ளை நிற உடை அணிந்திருந்த டிரைவர், அவரைப் புன்சிரிப்புடன் வரவேற்றார். "எங்கே போகணும்? எத்தனை மணிக்குள் திரும்பி வருவோம்?" என்றெல்லாம் கேள்விகள் கேட்டு எரிச்சலூட்டவில்லை. தேவையற்ற பேச்சுக்கள், புலம்பல்கள் இல்லை. கேட்ட கேள்விகளுக்கு மட்டும் அளவாக, தெளிவாகப் பதில் சொன்னார். தேவையற்ற வேகமோ, அநாவசியமாக பிரேக் போடுவதோ, சாலையில் மற்றவர்களைத் திட்டுவதோ இல்லை.

பயணி இதில் ஆச்சர்யம் அடைந்துவிட்டார். "எப்போதுமே நீங்கள் இப்படித்தானா?" என்று டிரைவரிடம் கேட்டார். "இல்லை சார். நானும் மற்ற டிரைவர்கள் போலத்தான் இருந்தேன். வேலையை மதிக்காமல், பயணிகளை மதிக்காமல், சத்தம் போட்டுக்கொண்டு, குறை கூறிக்கொண்டு இருந்தேன்" என்றார் டிரைவர். "பிறகு எப்படி உங்களை நீங்களே மாற்றிக் கொண்டீர்கள்?" என்று பயணி கேட்டார்.

"ஒருமுறை என் காரில் வந்த பயணி ஒரு ஹோட்டலில் நடைபெற்ற சொற்பொழிவுக்குச் சென்றார். காரில் சும்மா உட்கார்ந்திருக்காமல், உள்ளே போய் ஓரமாக நின்று அந்தப் பேச்சாளர் பேசியதைக் கேட்டேன். அது என்னை மாற்றிவிட்டது.

'வாத்துகள் எந்த நேரமும் சத்தம் போட்டுக்கொண்டே இருக்கும். தங்கள் வாழ்க்கையைப் பற்றிப் புகார் செய்வது போலவே அது இருக்கும். ஆனால், கழுகு எப்படி சத்தமெழுப்பும் என்று நிறைய பேர் கேட்டிருக்கவே முடியாது. எல்லாவற்றையும் தாண்டி உயர்ந்து சென்று அது தன் இலக்கில் கண்ணாக இருக்கும். நீங்கள் வாத்தாக இருக்காதீர்கள், கழுகாக மாறுங்கள்' என்று பேச்சாளர் சொன்னார்.

அன்று முதல் எதற்காகவும் புகார் செய்வதையும் புலம்புவதையும் நிறுத்திவிட்டேன். கழுகு போல மாறி உயர ஆசைப்பட்டேன். ஈடுபாட்டுடன் உழைத்தேன். வரும் பயணிகளிடம் அன்போடு பணிவாக நடந்துகொள்ள ஆரம்பித்தேன். ஒவ்வொரு நாளும் இனிய நாளானது. மன அமைதி கிடைத்தது, வருமானமும் பெருகியது. ஒருமுறை பயணம் செய்தவர்கள், திரும்பத் திரும்ப என்னையே அழைக்க ஆரம்பித்தார்கள்" என்றார் டிரைவர்.

எல்லோருக்கும் பொருந்தும் வாழ்க்கைமுறை இது. நீங்கள் வாத்தா, கழுகா? முடிவு உங்களுடையது.



ஒருவனுக்கு ஐஸ்க்ரீம் என்றால் கொள்ளை ஆசை. மாதக் கடைசி நெருக்கடியில் இருந்தாலும், கொஞ்சம் பணம் செலவழித்து விலையுயர்ந்த ஐஸ்க்ரீம் ஒன்றை வாங்கிச் சாப்பிட உட்கார்ந்தான். ஒரு கரண்டி ஐஸ்க்ரீமை எடுத்து வாயில் வைத்தபோது லேசாக தலை வலிப்பது போல அவனுக்குத் தோன்றியது.

உடனே அவன் யோசிக்க ஆரம்பித்தான். 'நேற்று இரவு சாப்பிட்ட ஹோட்டல் சுத்தமாக இல்லை. எல்லாப் பாத்திரங்களையும் திறந்து போட்டிருந்தார்கள். எதிலாவது பல்லியோ, வேறு ஏதோ பூச்சிகளோ விழுந்திருக்குமோ? அதைக் கவனிக்காமல் சாப்பிட்டு விட்டேனா? இது வெறும் தலைவலியோடு நிற்குமா? அல்லது வேறு ஏதாவது ஆகுமா? ஒருவேளை உடம்பு மோசமாகி படுத்த படுக்கையாகி விடுவேனா?' என்றெல்லாம் யோசிக்க ஆரம்பித்தான்.

இந்த யோசனைகள் அவனுக்கே விபரீதமாகத் தோன்ற, கவனத்தைத் திசைதிருப்ப விரும்பி வெளியில் வேடிக்கை பார்த்தான். எதிரில் இருந்த துணிக்கடை ஷோகேஸில் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்த உடை அவனைக் கவர்ந்தது. ஒரு நீண்ட பெருமூச்சு அவனிடமிருந்து வெளிப்பட்டது.

'இந்த ஜென்மத்தில் இப்படிப்பட்ட உடைகளை என்னால் வாங்கி போட்டுக்கொள்ள முடியுமா? வாங்குகிற சம்பளம் அவசியச் செலவுகளுக்கே போதவில்லை. மாதக் கடைசி ஆனால் கடன் வாங்க வேண்டிய நிலைமை. இதுவும் ஒரு வாழ்க்கையா?'

இப்படியெல்லாம் அவன் சிந்தனைகள் ஓடிக் கொண்டிருக்க, கையிலிருந்த ஐஸ்க்ரீம் முழுசாகக் கரைந்துவிட்டது. ஆசை ஆசையாக வாங்கிச் சாப்பிட்டும் அதன் சுவையை அவனால் அறிய முடியவில்லை.

மனித மனம் இப்படித்தான் எப்போதும் நடந்து முடிந்த நிகழ்வுகளிலும், இனி நடக்க இருப்பவை பற்றிய கனவுகளிலும் மூழ்கியிருக்கிறது. இதனால் ஆனந்தமாகக் கழிய வேண்டிய 'இந்த நிமிடத்தை' இழந்துவிடுகிறது. நடந்து முடிந்ததையே எப்போதும் நினைத்துக்கொண்டிருந்தால், இழந்த எதுவும் உங்களுக்குத் திரும்பக் கிடைக்கப் போவதும் இல்லை. இனி நடக்கப் போவதைக் குறித்துச் சிந்தித்து மனக் குழப்பம் அடைவதும் தேவையில்லை. இந்த நிமிடமே உங்களுக்கு முழுசாகச் சொந்தமானது. அதை ஈடுபாட்டுடன் செலவழியுங்கள்.



# செயலில் காட்டுங்கள் ஈடுபாடு!

‘எண்ணங்களையெல்லாம் நல்ல செயலாக மாற்றும் ஆற்றல்தான் வெற்றியாக வளர்ச்சி பெறுகிறது’ என்றார் வால்டேர். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் சிறந்த எண்ணங்களை வளர்த்துக்கொள்வது வெற்றிக்கான வழி. ஒவ்வொருவருக்குள்ளும் தனித்திறமை இருக்கும். அதைச் சரியாக அடையாளம் கண்டு வாழ்க்கையில் கடினமாக உழைப்பவர்கள் சாதித்துக் காட்டுகிறார்கள். அவர்களை உலகம் கொண்டாடுகிறது; முன்னுதாரணமாகவும் பார்க்கிறது.

அவர்கள் அந்த வெற்றியைச் சாதாரணமாக அடைந்திருக்க மாட்டார்கள். அதற்காக கடின உழைப்பு, நேரம், பயிற்சி, முயற்சி எல்லாம் கொடுத்தே அந்த உயரத்தை அடைந்திருப்பார்கள். அந்தச் செயலில் பெரும் ஈடுபாடு காட்டியிருப்பார்கள். அது, சராசரி மனிதர்களைவிட அவர்களை மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் வாழ வைக்கும். ஈடுபாட்டுடன் உழைப்பவர்களின் வாழ்வில் கீழ்க்காணும் வித்தியாசங்கள் நிச்சயம் இருக்கும்:

● ஈடுபாடு காட்டும் மனிதர்கள், இரவில் நன்கு உறங்குவார்கள். செய்யும் வேலையில் எப்போதும் நிறைவு பெறுவார்கள் என்பதால், ஆழ்ந்த உறக்கம் அவர்களுக்குச் சாத்தியமாகும். அதனால் அதிகாலையிலேயே அவர்கள் விழித்துவிடுவார்கள். அதனால் ஒவ்வொரு நாளிலும் மற்றவர்களைவிடக் கூடுதல் நேரம் அவர்களுக்குக் கிடைக்கிறது. விழித்த நிமிடத்திலிருந்தே, அன்றைய வேலைகள் குறித்துப் பரவசத்துடன் யோசிக்கத் தொடங்கிவிடுவார்கள். தாங்கள் செய்யும் வேலை அவர்களுக்குத் திருப்தி தராததாக இருந்தாலும், அதன்மூலம் கிடைக்கும் எதிர்கால நன்மைகள் அவர்களை ஆர்வத்துடன் இயங்க வைக்கும்.

● அவர்களின் மனம் எப்போதும் வேலை குறித்த சிந்தனைகளால் நிரம்பியிருக்கும். யாருடன் எதைப் பற்றிப் பேசினாலும், சில நிமிடங்களிலேயே தங்கள் வேலை குறித்துப் பேச ஆரம்பித்துவிடுவார்கள். குடும்பத்தினர், நண்பர்கள் அல்லது உறவினர்களுடன் இணைந்து வேறு பொழுதுபோக்குகளில் ஈடுபட்டாலும், அப்போதும் வேலை குறித்தே அவர்கள் சிந்திப்பார்கள். பலருக்குப் பொழுதுபோக்குகளில் மகிழ்ச்சி கிடைக்கும் என்றால், இவர்களுக்கு மட்டும் வேலையில்தான் அதைவிட அதிக மகிழ்ச்சி கிடைக்கும்.

● சிலருக்குப் பழைய நண்பர்களை மீண்டும் பார்த்தால் ஆச்சர்யம் ஏற்படும், சிலருக்கு எதிர்பாராத பரிசுகள் ஆச்சர்யம் தரும், சிலருக்குப் பயணங்கள் ஆச்சர்யம் கொடுக்கும். இப்படி ஒவ்வொருவருக்கும் ஆச்சர்யம் ஏற்படுத்தும் விஷயங்கள் வேறுபடும். ஆனால், ஈடுபாடு உள்ள மனிதர்களுக்கு அவர்களின் வேலையே அதிக ஆச்சர்யம் தருவதாக இருக்கும். அந்த வேலையில் கிடைக்கும் முன்னேற்றம், அதனால் வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள், அதன்மூலம் கிடைக்கும் உயர்வு ஆகியவையே அவர்களை ஆச்சர்யப்படுத்தும்.

● தங்கள் வாழ்வுக்கு அர்த்தம் தரும் விஷயமாக அவர்கள் தங்கள் வேலையையே நினைப்பார்கள். அந்த வேலையில் அடையும் முன்னேற்றத்தை வைத்தே, தாங்கள் சரியான பாதையில் போவதாக அவர்கள் தீர்மானிப்பார்கள். தாங்கள் செய்யும் செயலில் கிடைக்கும் வெற்றிகளே அவர்களுக்கு மன நிறைவைக் கொடுக்கும். எதிர்காலம் குறித்த நம்பிக்கையை விதைக்கும்.

● ஒவ்வொருவரும் தாங்கள் மிகவும் நேசிக்கும் ஒரு விஷயத்துக்காகவே, வாழ்க்கையில் அதிக ரிஸ்க் எடுப்பார்கள். செயலில் ஈடுபாடு காட்டும் மனிதர்கள், தங்கள் வேலை அல்லது தொழிலில் அதிக ரிஸ்க் எடுப்பார்கள். தங்கள் வேலைக்காக மற்ற எல்லா விஷயங்களையும் தியாகம் செய்ய அவர்கள் தயாராக இருப்பார்கள். இத்துடன் ஒப்பிடும்போது மற்ற எல்லாமே முக்கியமில்லாத விஷயங்களாக அவர்களுக்கு ஆகிவிடும்.

● நம் பாதையில் இரண்டு விதமான விஷயங்கள் காத்திருக்கின்றன. ஒன்று, செய்து முடிக்க வேண்டிய மதிப்புள்ள வேலைகள். அவற்றைச் செய்வதால் நமக்கு முன்னேற்றம் கிடைக்கும். இரண்டு, தவிர்க்க வேண்டிய மதிப்பில்லாத வேலைகள். இவற்றைச் செய்வதால் அந்த நேரத்துக்கு மகிழ்ச்சி கிடைக்கலாம். ஆனால், நேரத்தை நாம் வீணடித்துவிடுவோம். ஈடுபாடுள்ள மனிதர்கள் எப்போதும் மதிப்புள்ள






வேலைகளையே தேடிப் போவார்கள். வாழ்க்கையில் மற்ற எல்லாமே அவர்களுக்கு முக்கியம் இல்லாத விஷயங்களாகத் தெரியும். அவற்றை கவனமாகத் தவிர்த்துவிடுவார்கள்.

● 'ஆபீஸ் வேலைகளையும், அந்த வேலைகளுடன் இணைந்த டென்ஷனையும் வீட்டுக்குக் கொண்டுவரக்கூடாது' என்று பலரும் அறிவுரை சொல்வார்கள். ஆனால், தாங்கள் செய்யும் வேலையில் அர்ப்பணிப்பும் ஈடுபாடும் கொண்ட மனிதர்களுக்கு, வீட்டுக்கு வந்தாலும் சும்மா இருக்கப் பிடிக்காது. அவர்கள் வீட்டுக்கு வந்தும் வேலையைத் தொடர்வார்கள். அந்த வேலையே அவர்களுக்கு எல்லாமுமாக இருக்கும். காரணம், அவர்களைப் பொறுத்தவரை அது வேலை இல்லை, வாழ்க்கை.

● சிலருக்கு மற்றவர்களைச் சந்திக்கும்போது பேசுவதற்கு ஆயிரம் விஷயங்கள் இருக்கும், ஆயிரத்து எட்டுப் பிரச்னைகள் இருக்கும். சினிமாவையும் அரசியலையும் குறித்துச் சுவாரசியமாகப் பேசுவார்கள். உக்ரைன் பிரச்னையைத் தீர்ப்பதற்கு எளிதான தீர்வு கண்டுபிடித்துச் சொல்வார்கள். ஆனால், வேலையில் ஈடுபாடு காட்டும் மனிதர்களுக்கு இப்படிப் பேசப் பிடிக்காது. அவர்கள் செய்தித்தாள் படித்தாலும், அதில் தங்கள் துறை சார்ந்த விஷயங்கள் இருக்கின்றதா என்றே தேடுவார்கள். அவர்களின் கவனமும் பேச்சும் எப்போதும் அவர்களின் வேலை சார்ந்ததாகவே இருக்கும்.

● பலருக்கு எந்தச் செயலிலும் ஒருவித மனத்தடை இருக்கும். 'இதுதான் என் எல்லை, இதைத் தாண்டி என்னால் எதுவும் செய்ய முடியாது' என்று தீர்மானமாக நம்புவார்கள். விளையாட்டு வீரர்கள் பலர் சாதிக்க முடியாமல் போவதற்கு இந்த மனத்தடையே காரணம். 'என்னால் 100 ரன் அடிக்க முடியாது, அதற்குள் அவுட்டாகிவிடுவேன்' என்று பயப்படும் ஒரு கிரிக்கெட் வீரர் கண்டிப்பாக அவுட் ஆகி விடுவார். 'என்னால் இந்தத் தூரத்துக்கு மேல் ஈட்டியை எறிய முடியாது' என்று கருதும் ஒரு வீரர் சாதிக்கவே மாட்டார். 'மையத்தில் இருக்கும் இலக்கைக் குறிவைத்து சுடுவது சந்தேகம்' என்று நம்பும் ஒரு துப்பாக்கி சுடும் வீரரால் வெல்ல முடியாது. ஆனால், ஈடுபாடு காட்டும் மனிதர்களுக்கு இப்படிப்பட்ட மனத்தடை இருக்காது. அவர்கள் எந்த எல்லையையும் தாண்டிச் சாதிப்பார்கள்.

● ஈடுபாடு காட்டும் மனிதர்கள், எப்போதும் நேர்மறையாகவே எதிர்காலத்தைக் குறித்துச் சிந்திப்பார்கள். இப்போது எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும், 'அடுத்தது என்ன' என்ற எதிர்பார்ப்பு அவர்களுக்கு எப்போதுமே இருக்கும். அதை அடைவதற்கான திட்டங்கள் அவர்கள் மனத்தில் தெளிவாக இருக்கும். அதனால், எதிர்பாராத நெருக்கடிகளில் அவர்கள் சிக்கிக்கொள்ள மாட்டார்கள். ●



## ஜெஃப் பெஜோஸ்!

புதுமையாக இ-காமர்ஸ் துறையில் இறங்கி, உலகம் முழுக்கப் பெரும்பாலான வீடுகளைச் சென்றடைந்த அமேசான் நிறுவனத்தை உருவாக்கியவர் ஜெஃப் பெஜோஸ். ஈடுபாட்டுடன் ஒரு செயலைச் செய்து வெற்றியை எட்டுவதற்கு 10 ரகசியங்களை அவர் சொல்கிறார்:

1. எப்படிப்பட்ட சூழலிலும் தயக்கமின்றித் துணிச்சலான முடிவுகளை எடுங்கள்.

2. ஜெயிக்க வேண்டும் என்ற வெறி உங்களுக்குள் இருக்க வேண்டும். அதற்காக வேகமும் ஆக்ரோஷமும் காட்டிச் செயல்களைச் செய்யுங்கள்.

3. எந்தத் துறையில் இருந்தாலும், அதில் உங்களைச் சுற்றி இருப்பவர்களின் மரியாதையை முதலில் சம்பாதியுங்கள்.

4. சோம்பலும் தயக்கமும் வெற்றியாளர்களின் அடையாளங்கள் இல்லை. எப்போதும் செயல்படுங்கள்.

5. வேலையில் நீண்ட நேரம் மூழ்கி, வாழ்க்கையின் இயல்பான இன்பங்களைத் தொலைக்காதீர்கள். பிறகு, வேலையைச் செய்வதற்கான உத்வேகமே கிடைக்காமல் போய்விடும்.

6. வெறும் ஐடியாக்களை வைத்திருந்தால் நீங்கள் எந்தத் திசையிலும் போக முடியாது. உங்கள் ஐடியாக்களைச் செயலாக மாற்றுங்கள்.

7. நீங்கள் இருக்கும் துறையில் எவரையேனும் ரோல் மாடலாக மனத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அவரைப் போல ஆக வேண்டும் என்ற தாகம் எழும்.

8. நீங்கள் மிகவும் நேசிக்கும் ஒரு விஷயத்தையே உங்கள் வேலை அல்லது தொழிலாக வைத்துக்கொள்ளுங்கள். மனத்தில் வீண் சலனங்கள் எழாது.

9. எந்த வேலையையும் யாரும் தனியாகச் செய்ய முடியாது. நீங்கள் இயங்கும் குழுவுடன் இணக்கமாக இருங்கள்.

10. நீங்கள் போடும் எந்தத் திட்டமும் நீண்டகாலத்துக்கானதாக இருக்கட்டும்.



## ஜாக் மா!

சீனாவின் புகழ்பெற்ற தொழிலதிபர் ஜாக் மா, எதையும் ஈடுபாடு காட்டிச் செய்து வெற்றியை எட்டுவதற்கு 10 மந்திரங்களைச் சொல்கிறார்:

1. எல்லாத் தவறுகளையும் நீங்களே செய்து கற்றுக்கொள்ள முடியாது. அடுத்தவர்களின் தவறுகளிலிருந்தும் கற்றுக்கொள்ளுங்கள்.
2. எதைச் செய்தாலும், எண்ணிக்கையைவிடத் தரத்தில் கவனம் செலுத்துங்கள். அது பழகிவிட்டால், நீங்கள் நினைத்த எண்ணிக்கையில் தரமாகச் செய்வது சாத்தியமாகிவிடும்.
3. எதையும் தயக்கமின்றிச் செய்து பார்ப்பதற்கு எப்போதும் முதல் ஆளாகச் செல்லுங்கள்.
4. எதிர்காலத்துக்காக இப்போதே திட்டமிடுங்கள். வேகமாக மாறிவரும் உலகில் எது வேண்டுமானாலும் செல்லாக்காசாகிப் போகலாம்.
5. போட்டியாளர்களை மதித்து நடந்துகொள்ளுங்கள். அவர்களை எப்படி ஜெயிப்பது என்பதற்கான பாதை தெரியும்.
6. எந்தச் சவாலையும் உங்களுக்கான புது வாய்ப்பாக நினைத்துப் பாருங்கள்.
7. யாருமே நம்பாத சூழலிலும் உங்களை நீங்கள் நம்புங்கள்.
8. எப்போதும் உங்களைச் சுற்றி மதிப்பான மனிதர்களும், மதிப்பான பொருட்களும் மதிப்பான எண்ணங்களும் இருக்கட்டும்.
9. ஆரோக்கியம் முக்கியம். எவ்வளவு வேலைகள் இருந்தாலும் உடல்நலத்தை மறக்காதீர்கள்.
10. வேலைகளுக்கு மத்தியில் உங்களை ரிலாக்ஸ் செய்துகொள்ளுங்கள். பொழுதுபோக்குகளும் நண்பர்களும் இதற்கு முக்கியம்.





## எலான் மஸ்க்!

'ஈடுபாடும் அர்ப்பணிப்பும் கொண்ட உழைப்பை செலுத்தினால், நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும் ஜெயிக்கலாம்' என்று சொல்கிறார் எலான் மஸ்க். இதற்காக அவர் சொல்லும் பத்து ஃபார்முலாக்கள்:

1. தோல்விகளில் கலங்காதீர்கள். புதிய முயற்சிகளைச் செய்பவர்களே தோல்விகளைச் சந்திக்கிறார்கள். முயற்சியே செய்யாதவர்களுக்குத் தோல்விகள் வருவதில்லை.
2. இப்போது செய்யும் ஒரு செயலை இதைவிடச் சிறப்பாக எப்படிச் செய்யலாம் என்று எப்போதும் சிந்தித்துக்கொண்டே இருங்கள்.
3. பெரிய கனவுகளைக் காண்பவர்களே பெரிய செயல்களைச் செய்கிறார்கள்.
4. 'என்னால் இவ்வளவுதான் முடியும்' என்று உங்களைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். நீங்கள் நினைப்பதைவிட அதிகமாக உங்களால் கற்கவும் செயல்படவும் முடியும்.
5. விடாமுயற்சி இருந்தால், விரைவில் ஜெயிக்கலாம்.
6. புதிய இடங்களை, புதிய சூழல்களை நினைத்துப் பயப்பட வேண்டாம். அங்குதான் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.
7. உங்களுக்கு எதில் ஆர்வமும் திறமையும் இருக்கிறதோ, அதைச் செய்யுங்கள்.
8. எவர் மீதும் கோபத்தை நீண்ட காலம் சுமக்காதீர்கள். பழிவாங்கும் உணர்வு உங்களையே வீணாக்கிவிடும்.
9. சாதாரண மனிதர்களே அசாதாரண செயல்களைச் செய்யும் வல்லமை படைத்தவர்கள். உங்களையோ, எவரையுமோ குறைத்து மதிப்பிடாதீர்கள்.
10. ஊக்கப்படுத்த யாரும் இல்லையென்றாலும், உங்களுக்கு நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

## ஸ்டீவ் ஜாப்ஸ்!

வேலை, தொழில், வியாபாரம் எதிலும் ஈடுபாடு காட்டி வெற்றியை அடைவதற்கு ஸ்டீவ் ஜாப்ஸ் சொல்லும் 10 கட்டளைகள்:



1. எல்லோரையும் போலச் சராசரியாக வாழ்வதில் திருப்தி அடையாதீர்கள்.
2. எந்தத் துறையில் இருந்தாலும், அதை அளவு கடந்து நேசியுங்கள்.
3. மற்றவர்கள் போல உழைக்காமல், உங்களுக்கு என்று தனித்தன்மையை உண்டாக்குங்கள்.
4. உங்களுக்கு உதவி தேவைப்படுகிறது என்றால், சரியான மனிதர்களிடம் தயக்கமில்லாமல் கேளுங்கள்.
5. பணத்துக்காக எதையும் செய்யாதீர்கள். எந்தச் செயலையும் நேசித்துச் செய்தால், அதன் விளைவாக அளவற்ற பணம் கிடைக்கும்.
6. நீங்கள் செய்யும் வேலையை நினைத்துப் பெருமிதப்படுங்கள்.
7. நீங்கள் ஒரு பொருளை உருவாக்குகிறீர்கள் என்றால், அது உயர்தரமாக இருக்கட்டும். வேலை செய்கிறீர்கள் என்றால், அதன் விளைவு மிகச்சிறப்பானதாக இருக்கட்டும்.
8. வாடிக்கையாளர்கள் மற்றும் உங்களிடம் வேலை வாங்குபவர்களை மதித்துப் போற்றுங்கள்.
9. நீங்கள் உருவாக்கும் எதுவும் மதிப்பானதாக இருக்கும் எனில், அதன் மதிப்பே உங்களை உயர்த்தும்.
10. பசித்திருங்கள், அறியாமையுடன் இருங்கள். எல்லாம் தானாக வந்து சேரும்.

# ஈடுபாடே வெற்றியின் ஒற்றை ரகசியம்!

‘நீங்கள் ஈடுபாடு காட்டாத எந்த ஒரு விஷயத்திலும் வெற்றி பெற முடியாது. முழுமையான ஈடுபாட்டுடன் செய்யும் விஷயத்தில் உங்களுக்குத் தோல்வி என்பதே கிடையாது.’ இது நம் நேசத்துக்குரிய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் சொன்ன புகழ்மிக்க வாசகம்.

அந்த ஈடுபாடு எந்த அளவுக்கு இருக்க வேண்டும்? இதோ ஒரு கதை. ஒரு நாட்டின் மன்னர் தன் அரண்மனையில் மிகச் சிறந்த சேவல் ஓவியத்தை வைக்க நினைத்தார். ‘உலகத்திலேயே எவரிடமும் இல்லாத அளவுக்கு மிகச்சிறந்த சேவல் ஓவியத்தை வரைந்து தருபவர்களுக்குப் பரிசு வழங்கப்படும்’ என அறிவித்தார். அந்த நாட்டு ஓவியர்கள் எத்தனையோ பேர் ஓவியங்களுடன் அரண்மனைக்கு வந்தார்கள். எதிலும் மன்னருக்கு முழுத் திருப்தி ஏற்படவில்லை.



‘வெளிநாட்டு ஓவியர்களும் சேவல் ஓவியம் வரைந்து தரலாம்’ எனப் பல நாடுகளுக்குத் தகவல் அனுப்பினார் மன்னர். பல நாடுகளிலிருந்தும் வந்து குவிந்த ஓவியங்கள் அனைத்தும் மன்னரின் பார்வைக்கு வைக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான ஓவியங்களைப் பார்த்ததும் அவர் குழம்பிப் போனார். தனக்கு இளம் வயதில் ஓவியம் வரையக் கற்றுக் கொடுத்த ஓவிய ஆசிரியரை நீதிபதியாக நியமித்து, தேர்வு செய்யச் சொன்னார்.

எல்லா ஓவியங்களையும் பார்த்த அந்த வயதான ஓவிய ஆசிரியர், ‘‘இதில் எந்த ஓவியமும் தகுதியானது இல்லை’’ என்று உதட்டைப் பிதுக்கினார். ஓவியங்களுடன் வெளிநாடுகளிலிருந்து வந்த சில ஓவியர்கள் கோபமாகிவிட்டார்கள். “எதை வைத்து இப்படிச் சொல்கிறீர்கள்?” என்று அவர்கள் கேட்டார்கள்.

ஓவிய ஆசிரியர் அமைதியாக, ‘‘இந்த ஓவியங்களை எல்லாம் ஓர் அறையில் அடுக்கி வைத்துவிட்டு, உள்ளே சண்டைச்சேவல்களை விடுவோம். பொதுவாகச் சேவல்களுக்கு மற்றொரு சேவலைப் பார்த்ததும் சண்டை போடத் தோன்றும். அப்படி எந்த ஓவியத்தைப் பார்த்தாவது சேவல்கள் சண்டை போட்டால், அந்த ஓவியம்தான் மிகச் சிறந்த ஓவியம் என்று முடிவு செய்வோம்” என்றார்.

மன்னரும் இதற்கு ஒப்புக்கொண்டார். ஓவியங்கள் அரண்மனையின் ஒரு பிரமாண்ட அறையில் அடுக்கி வைக்கப்பட்டன. மன்னர் அந்த அறையில் நிறைய சேவல்களைக் கொண்டுவந்து விடுமாறு கட்டளை பிறப்பித்தார். வந்த சேவல்கள் எந்த ஓவியத்தையும் பார்த்துச் சண்டை போடாமல், அமைதியாக வெளியே போய்விட்டன.

அண்டை நாட்டு ஓவியர்கள் பலரும், “எங்கள் ஓவியங்களை நிராகரிக்கிறீர்களே... சேவல்களைச் சண்டை போடத் தூண்டும் அந்த ஓவியத்தை நீங்கள் ஏன் வரையக்கூடாது?” என அந்த ஓவிய ஆசிரியரிடம் சவால் விட்டார்கள். இது தன் நாட்டுக்கு விடப்பட்ட சவால் என மன்னருக்கும் புரிந்தது. அவரும் தன் ஆசிரியரிடம் ஓவியம் வரையச் சொல்லிக் கேட்டார்.

‘‘சரி, நான் வரைகிறேன். எனக்கு ஆறு மாத காலம் அவகாசம் தேவை” என்றார் ஓவிய ஆசிரியர். மன்னர் உடனே, “ஆறு மாதங்கள் கழித்து இதே அறையில் இந்தப் போட்டி நடத்தப்படும்” என்று அறிவித்தார்.



ஆறு மாதங்கள் ஆனதும் அதே அறையில் எல்லா ஓவியர்களும் மீண்டும் கூடினார்கள். ஓவிய ஆசிரியரும் வந்தார். ஆனால், தன் கையில் எந்த ஓவியத்தையும் அவர் கொண்டு வரவில்லை. மன்னர் அவரை அதிர்ச்சியுடன் பார்க்க, "இப்போது இங்கேயே சில நிமிடங்களில் ஓவியம் வரைகிறேன்" என்று வண்ணங்களை எடுத்து விரைவாக ஓவியத்தைவரைந்தார். அந்த ஓவியம், மற்ற ஓவியங்களோடு வைக்கப்பட்டது. மீண்டும் அந்த அறைக்குச் சேவல்கள் அனுப்பப்பட்டன. அவரது ஓவியத்திலிருந்த சேவலை நிஜ சேவலாகக் கருதி, அதனிடம் பல சேவல்கள் சண்டைக்குப் போயின.

எல்லா நாட்டு ஓவியர்களும் இப்போது புரிந்துகொண்டு அந்த ஆசிரியரிடம் மன்னிப்புக் கேட்டனர். மன்னருக்கு பெரும் மகிழ்ச்சி. அவர் தன் ஆசிரியரிடம், "எப்படி உங்களால் இதை வரைய முடிந்தது? ஏன் இதற்கு ஆறு மாத காலம் தேவைப்பட்டது? அவ்வளவு நேரம் கேட்டும், அப்போது எதுவும் வரையாமல் இங்கு வந்துதானே வரைந்தீர்கள். இதை ஆறு மாதங்களுக்கு முன்பாகவே செய்திருக்க முடியாதா?" என்று கேட்டார்.

"மன்னா, கடந்த ஆறு மாதங்களாக நான் சண்டை சேவல்களோடு வாழ்ந்தேன். அவை எப்படி நடந்துகொள்கின்றனவோ அப்படியே நானும் நடந்தேன். அவற்றுடன் தூங்கினேன், அவற்றுடன் காடு மேடுகளில் அலைந்தேன். கிட்டத்தட்ட நானும் ஒரு சண்டைச் சேவல் போலவே மாறிவிட்டேன். இப்படிச் சேவல்களுடன் ஒன்றிப் போய் சேவலாகவே மாறி வாழ்ந்த பிறகே அந்தச் சேவல் ஓவியத்தை வரைய முடிந்தது" என்றார் அந்த ஓவிய ஆசிரியர்.

வெற்றியின் ஒற்றை ரகசியம், இப்படி ஒன்றிப்போய் ஈடுபாடு காட்டுவதுதான். வேலை, தொழில், வியாபாரம், படிப்பு என எதுவாக இருந்தாலும், அந்தச் செயலுடன் ஒன்றிப் போவது மிகவும் அவசியம். வெற்றியின் ரகசியம், இந்த ஈடுபாடுதான்.


நீங்கள் ஆன்மிக நம்பிக்கை உள்ளவராக இருந்தால், இதை ஒரு பிரார்த்தனையுடன் கருதலாம். பிரார்த்தனை செய்யும்போது பலரும் கடவுளுடன் ஒன்றிப் போகிறார்கள். வெறுமனே உதடுகள் ஏதோ வார்த்தைகளை முணுமுணுக்க, கண்கள் கடவுளைப் பார்த்துக்கொண்டிருக்க, மனம் வேறு எங்கோ அலைபாய்ந்தால் அது பிரார்த்தனை கிடையாது. அத்தனைப் புலன்களும் மனதும், கடவுளுடன் ஒன்றிப் போக வேண்டும். தொழிலாக இருந்தாலும், வியாபாரமாக இருந்தாலும், வீட்டு வேலையாக இருந்தாலும், அலுவலக வேலையாக இருந்தாலும், படிப்பாக இருந்தாலும், எடுத்த காரியத்துடன் ஒன்றிப்போய் ஈடுபாடு காட்டினால் வெற்றி நிச்சயம்.

ஒரு செயலில் நீங்கள் முழுமையாக ஈடுபாடு காட்டும்போது, அதன் அத்தனை நுட்பங்களையும் கற்றுக்கொள்வீர்கள். அது உங்களை தன்னம்பிக்கையுடன் அந்த செயலைச் செய்ய வைக்கும். தன்னம்பிக்கை உங்களைக் கடின உழைப்பைச் செலுத்த வைக்கும். இவை இணைந்தால், உங்கள் வெற்றியை யாரும் தடுக்க முடியாது. ●

# ஈடுபாடு ஏற்படுத்தும் ஆசை!

நமக்கே நமக்கு எனச் சொந்தமாக ஒரு வீடு கட்டி, அதில் குடியேறுவது வாழ்நாள் முழுவதும் உங்கள் கனவாக இருந்திருக்கும். அதில் என்னென்ன இருக்க வேண்டும் என்று வருஷக்கணக்கில் திட்டமிட்டு இருப்பீர்கள். மற்ற எல்லா விஷயங்களையும் மறந்து இந்த வீட்டைப் பற்றி மட்டுமே நினைத்து வந்திருப்பீர்கள். கடைசியில் ஒரு நாள் உங்கள் கனவுகள் நிஜமாகி வீட்டைக் கட்டிமுடித்து அதில் குடியேறும் நேரத்தில் மகிழ்ச்சியும் மனநிறைவும் கிடைக்கிறது அல்லவா! ஈடுபாடு காட்டி எந்தச் செயலைச் செய்தாலும், அதில் இந்த உணர்வு கிடைக்கும்.

புதுவீட்டுக்குக் குடிபோனதும் உங்களுக்குக் கிடைக்கும் நிறைவு, உங்களிடமிருந்து சீக்கிரமே மறைந்து விடக்கூடும். ஏனென்றால் அதைவிடப் பெரிய ஆசை ஒன்று அடுத்ததாகத் தோன்றிவிடும். அடுத்தடுத்து இப்படி வெவ்வேறு இலக்குகளை ஈடுபாட்டுடன் துரத்தும் மனிதர்களுக்கே வளர்ச்சி சாத்தியமாகிறது.





# ஈடுபாடும் சோம்பலும்!

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீனிடம் ஒருமுறை ஒரு கேள்வி கேட்டார்கள். “நீங்கள் கண்டறிந்த மகத்தான உண்மை, ரிலேட்டிவிட்டி தியரி. இதை நீங்கள் கண்டுபிடிக்காமல் விட்டிருந்தால் இந்த உலகம் என்னவாகி இருக்கும்?'' என்று கேட்டார்கள். ஐன்ஸ்டீன் சிரித்தபடி, “பெரிதாக ஒன்றும் பாதிப்பு ஆகியிருக்காது. அடுத்த சில வாரங்களிலேயே வேறு ஒருவர் அதைக் கண்டறிந்து இருப்பார்” என்றார்.

இது உண்மை. காரணம், அதே காலகட்டத்தில் பல விஞ்ஞானிகள் பல பகுதிகளில் அதுபற்றி ஆய்வு செய்து கொண்டிருந்தனர். அந்த ஆய்வுகள் வெவ்வேறு கட்டங்களில் இருந்தன. யார் முந்தப் போகிறார்கள் என்பதற்குத்தான் அறிவியல் உலகம் காத்திருந்தது. ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு விஞ்ஞானியும் ரிலேட்டிவிட்டி தியரியின் பல அம்சங்களை ஆய்வு செய்திருந்தார். கிட்டத்தட்ட முடிவையும் கண்டறிந்து விட்டார். ஆனால் அதை முழுமை செய்து ஆராய்ச்சிக் கட்டுரையாக உருவாக்குவதில் தாமதம் செய்துவிட்டார். அவர் கொஞ்சம் சோம்பேறித்தனமாக இருந்துவிட்டதால், புகழ் முழுவதும் ஐன்ஸ்டீனுக்குக் கிடைத்தது. அவரது ஆராய்ச்சியை மனதில் வைத்துக் கொண்டுதான் ‘அடுத்த சில வாரங்கள்’ என்று ஐன்ஸ்டீன் சொன்னதாகக் கருதுகிறார்கள்.

பலர் இப்படித்தான் பெரும்புகழையும் பொருளையும் சோம்பேறித்தனத்தால் இழக்கிறார்கள். ‘பிறகு பார்த்துக்கொள்ளலாம்... பின்னர் செய்து முடிக்கலாம்...’ என்று தள்ளி வைத்தவர்களை உலகம் மொத்தமாகத் தள்ளி வைத்து விடுகிறது. நீங்கள் ஈடுபாடு காட்டும் ஒரு செயலில் சோம்பேறித்தனம் கூடாது.







## சலிப்பைத் துரத்தும் ஈடுபாடு!

காலையில் கூட்ட நெரிசலில் நசுங்கிப் பயணம் செய்து, அதே வேலையைத் தினம் தினம் செய்து, வீடு வந்ததும் சற்று நேரம் தொலைக்காட்சி பார்த்து, பிறகு சாப்பிட்டுவிட்டுத் தூக்கம். மீண்டும் மறுநாள் காலையில் அலுவலகம். சில நேரங்களில் ‘என்ன வாழ்க்கை’ என்று சலிப்பு தட்டி வாழ்க்கை மீதே வெறுப்பு வருகிறது. வாழ்க்கையைச் சிக்கலாக்கிக் கொள்வதற்கு இந்தச் சலிப்பு ஒன்று போதும்.

சலிப்பைத் துரத்த என்ன செய்வது என்று பலருக்கும் தெரியவில்லை. ‘விருப்பமான செயல்களை மறுமுறை செய்வது சலிப்பு தருகிறது’ என்பதால் புதிதாக ஒன்றினை மேற்கொள்ள விரும்புகிறார்கள். ஆனால், ஈடுபாடு இருந்தால் சலிப்பு வராது. ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்தாலும், ஒவ்வொரு நாளும் அது அப்போது புது அனுபவம் தரும்.

## திசைமாற்றாத ஈடுபாடு!

ஒரு செயலைச் செய்யும்போது திசைமாறி விலகிப் போய்விடுவது இயல்புதான். விரும்பி நடந்த பாதையிலிருந்து விலகி நடப்பது, பழகிய சாலையிலேயே தவறான திருப்பத்தில் போய்விடுவது என்றெல்லாம் நடக்கும்போது கலங்கவோ, கவலைகொள்ளவோ எதுவுமில்லை. “அடடா! தப்பு நடந்து போச்சே” என்று சோர்ந்து போய் அங்கேயே நிற்கக்கூடாது. சுதாரித்துக்கொண்டு சரியான பாதைக்குத் திரும்புவதே முக்கியம்.


பாதையிலிருந்து மாறிச் செல்வது பெரும்பாலும் ஏன் நிகழ்கிறது? இலக்கைத் தவறவிடுவதால் நிகழ்கிறது. இலக்குகளில் ஆர்வம் குறைவதோ, இலக்குகளை எட்ட முடியுமா என்ற சந்தேகம் வருவதோ இதற்குக் காரணம். உங்கள் இலக்குகளில், உங்கள் கனவுகளில் நம்பிக்கை வையுங்கள். ஈடுபாட்டுடன் அதை நோக்கி முன்னேறிக்கொண்டே இருங்கள். நினைப்பது நிஜமாகும்.

## மறப்பதே ஈடுபாடு!

எந்த ஒரு செயலையும் ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும் என்றால் மற்ற எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டும். குழந்தைகள் பாடங்களைப் படிக்கும் போது, விடுமுறையில் ஆடிய கிரிக்கெட் விளையாட்டு பற்றியோ, எப்போதோ பார்த்த கார்ட்டூன் படங்களைப் பற்றியோ நினைத்துக்கொண்டிருந்தால் படிக்க முடியாது. இயந்திரத்தனமாக உதடுகள் பாடத்தை உச்சரிக்க, மனம் வேறு எங்கேயோ ஊர் சுற்றிக் கொண்டிருக்கும். படித்தது மூளையில் ஏறாது.

சாதிக்கத் துடிக்கும் ஒரு விஞ்ஞானி பரிசோதனைக் கூடத்தில் இருக்கும்போது வெளியுலகத்தை மறந்து விடுகிறார். வெளியில் மழை கொட்டுகிறதா, வெயில் கொளுத்துகிறதா... எதுவும் அவரைப் பாதிப்பதில்லை. அதே பரிசோதனைக் கூடத்தின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு ஆராய்ச்சிகள் நடக்கலாம். அதையெல்லாம் அவர் கவனிக்க மாட்டார். தனது வேலையில் மட்டும் கவனமாக இருப்பார். இப்படி ஈடுபாடு காட்டுபவர்களே தங்கள் லட்சியத்தில் வெல்கிறார்கள்.

உங்கள் தினசரி வாழ்க்கையில் இதுபோல மறப்பதும், நினைப்பதும் நடந்துகொண்டே இருக்கிறது. ஒவ்வொரு கணத்திலும் சில விஷயங்கள் மறக்கப்படுகின்றன. வேறு சில விஷயங்கள் புதிதாக நினைவுக்கு வருகின்றன. அலுவலகத்தில் நுழைந்து வேலை பார்க்க உட்கார்ந்ததும் குடும்பம் பற்றிய நினைப்பு மறந்துவிடுகிறது. மாலை அலுவலகம் முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போதுதான் மனைவி, குழந்தைகள் ஞாபகம் வருகிறது. வாழ்க்கையில் ஒன்றை மறப்பதுதான் இன்னொன்றை ஈடுபாட்டுடன் நினைப்பதற்கான வழி.



# ஈடுபாட்டு மொழிகள்!

❖ நீங்கள் ஈடுபாடு காட்டாத ஒரு செயலில் உங்களால் வெற்றியை அடைய முடியாது. ஈடுபாட்டுடன் செய்யும் எந்தச் செயலிலும் உங்களுக்குத் தோல்வியே கிடைக்காது.

❖ வெற்றிபெற விரும்பினால், நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை அறிந்து செய்யுங்கள், நீங்கள் செய்வதை ஈடுபாட்டுடனும் நம்பிக்கையுடனும் செய்யுங்கள்.

❖ வாழ்க்கையில் நீங்கள் விரும்பியதை அடைவதற்கான முதல் படி, உங்களுக்கு என்ன வேண்டும் என்பதைத் தீர்மானித்தல். இரண்டாம் படி, அதை அடைவதற்கு ஈடுபாட்டுடன் உழைத்தல்.

❖ ஒரு வெற்றிகரமான மனிதனுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடு வலிமையின் பற்றாக்குறை அல்ல, அறிவின் பற்றாக்குறையும் அல்ல. மாறாக, ஈடுபாட்டின் பற்றாக்குறையே ஆகும்.

❖ தன்னைத் தானே அறிவதற்குச் சிறந்த வழி செயல்தான். உங்களுக்கான செயலை முழு ஈடுபாட்டுடன் செய்து முடியுங்கள். உங்களின் தகுதியும் தரமும் என்ன என்பதை நீங்களே கண்டுபிடித்து விடுவீர்கள்.

❖ வாழ்க்கை என்பதே ஈடுபாட்டின் விளைவுதான். ஈடுபாடு இல்லாத செயல்களைச் செய்வோருக்கு சிறப்பான வாழ்க்கை அமையாது.

❖ ஒவ்வொரு செயலையும் ஈடுபாட்டுடன் செய்யும் இடங்களில் வளர்ச்சி என்பது தானாக வந்துவிடுகிறது.

❖ நீங்கள் நம்பும் ஒரு செயலை ஈடுபாடும் ஆர்வமும் காட்டிச் செய்யுங்கள். அதை நேர்மையாகவும் அச்சமின்றியும் செய்யும்போது, அதில் நீங்கள் ஜெயிப்பதை யாராலும் தடுக்க முடியாது.

❖ ஒருவருக்குச் சொல்லிக் கொடுத்தால், அவர் அதை மறந்துபோகலாம். ஒருவருக்குச் செய்து காட்டினால், அவருக்கு அது ஞாபகம் இருக்கலாம். அவரைச் செயலில் ஈடுபடுத்தினால், நிச்சயம் அதைப் புரிந்துகொண்டு தொடர்ந்து செய்வார்.

❖ ஒரு செயலை எவ்வளவு ஈடுபாட்டுடன் உங்களால் செய்ய முடியும் என்பதை நீங்கள்தான் தீர்மானிக்கிறீர்கள். உங்களுக்கான எல்லைகளைச் சுருக்காதீர்கள்.

❖ உங்களுக்கு எந்த வேலையைச் செய்யப் பிடிக்காதோ, தினமும் அப்படிப்பட்ட ஒன்றிரண்டு வேலைகளைச் செய்யப் பழகிக்கொள்ளுங்கள். நாளடைவில் அப்படிப்பட்ட செயல்கள் மீது உங்களுக்கு இருந்த வெறுப்பு மறையும். உங்கள் கடமைகளை ஈடுபாட்டுடன் செய்வதற்கு இது உதவியாக இருக்கும்.


❖ துணிவு, கடின உழைப்பு, ஈடுபாடு இந்த மூன்றையும் பொருத்தே உங்கள் வாழ்வில் மகிழ்ச்சி பிறக்கும்; நீடிக்கும்.

❖ உங்களால் ஈடுபாடு காட்டமுடியாத ஒரு செயலில் நூறு சதவிகிதம் முழுமையாக உழைப்பையும் அர்ப்பணிப்பையும் செலுத்த முடியாது. கடைசியில் அதன் விளைவு, உங்களுக்கு ஏமாற்றம் தருவதாக ஆகிவிடும்.


❖ வாழ்வின் இனிமையை ருசிக்க ஒரே வழி, எதிலும் முழு ஈடுபாடு காட்டுவதுதான்.

❖ எதுவுமே செய்யாதபோது, நாம் சக்தியற்றவர்களாக உணர்வோம். ஆனால், ஒரு செயலை ஈடுபாட்டுடன் செய்ய ஆரம்பித்தால், நம்மால் எப்படிப்பட்ட மாற்றத்தையும் நிகழ்த்த முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். ●






RAMRAJ
LittleStars
KIDS DHOTIS & SHIRTS
www.ramrajcotton.in


Shirt
Created For
ALL SEASON
Crafted for comfort
LINEN PARK®
DHOTIS • SHIRTS • TROUSERS • FABRICS
By
RAMRAJ ©
Z 6135


Float in Shades
RAMRAJ
CULTURE CLUB®
MATCHING DHOTIS & SHIRTS
Available at Ramraj Cotton Showrooms and All Leading Textile Shops
Shop Online @ www.ramrajcotton.in


Kokhila®
CHEMISE • PANTIES • BRASSIERE
By
RAMRAJ©
Feel free... Sing free...
Available at Company Showrooms & All leading Textile Shops
shop online@ www.ramrajcotton.in

**உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?**

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421–4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**

# ஈடுபாடும் பிரார்த்தனையும்!



எந்தச் செயலையும் ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும் என்கிறபோது, இறைவனை நினைத்துச் செய்யும் பிரார்த்தனையும் அப்படித்தான் அமைய வேண்டும். பிரார்த்தனையைக் காந்தியடிகள் ‘கடவுளுடன் பேசுகிற நேரம்’ என்று வர்ணிப்பார். ஒருமுறை தனது நண்பர் ஒருவரின் வீட்டுக்குப் போனார் காந்தியடிகள். அந்த நேரத்தில் நண்பர் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். காந்தி வந்திருப்பதை அறிந்ததும் விரைவாகத் தன் பிரார்த்தனையை முடித்துக்கொண்டார்.

“ஏன் இப்படிச் செய்தீர்கள்?” என்று வருந்தினார் காந்தி. “நீங்கள் முக்கியமான பெரிய மனிதர். உங்களோடு பேச வேண்டியிருந்ததால் பிரார்த்தனையை அவசரமாக முடித்துக்கொண்டேன்’’ என்றார் அவர். ‘‘கடவுள் என்னைவிட முக்கியமான பெரியவர் அல்லவா? அவருடன் நீங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, அவருடன் ஒப்பிடும்போது சாதாரணமான நான் காத்துக்கொண்டிருக்க வேண்டும். அதுதானே இயல்பு” என்றார் மகாத்மா.

காந்தியின் கருத்துப்படி பிரார்த்தனை வெறும் சடங்கு அல்ல; பேரம் அல்ல; கடவுளுடன் நாம் பேசும் நேரம். பக்தியில் பிரார்த்தனை என்பது ஆத்மார்த்தமாக இருக்க வேண்டும். வெறுமனே உதட்டளவில் மந்திரம் சொல்வதோ, மணி அடிப்பதோ, கூச்சல் போடுவதோ, பாடுவதோ பிரார்த்தனை அல்ல, அது மனதிலிருந்து வர வேண்டும். ‘இதை நிறைவேற்றினால் உன் கோயிலுக்கு வருகிறேன்’, ‘உண்டியலில் காசு போடுகிறேன்’, ‘மொட்டை அடித்துக்கொள்கிறேன்’ என்றெல்லாம் பேரம் பேசுவது கூடாது. முற்றிலும் இது தவறு என்று சொல்லவில்லை. இதைத் தாண்டிச் செய்யும் வழிபாடு இன்னும் சுகமானது; சுத்தமானது. நமக்கு ஏதாவது ஒன்றைச் செய்வதற்கு, பிரதிபலன் எதிர்பார்க்கும் இயல்பு கடவுளிடம் இல்லை. இயல்பாக இதயத்திலிருந்து பக்தி உணர்வும், நன்றியுணர்வும் பெருக வேண்டும்.

ஒரு கதை... அடர்ந்த காட்டுக்குள் ஒரு மரத்தடியில் அமர்ந்து ஆழ்ந்த தியானத்தில் இருந்தார் ஒரு துறவி. சூரியன் மறையப் போவதால் இருட்ட ஆரம்பித்திருந்த நேரம். அப்போது கிராமத்து ஆசாமி ஒருவர் பரபரப்பாக காட்டுக்குள் அந்த மரத்தை ஒட்டிய பாதையில் ஓடிவந்தார்.

“மகனே... செல்லம்... எங்கேடா இருக்கே?” என்று சத்தமாகக் குரல் எழுப்பியபடி அவர் ஓடிவந்தார். அமைதியான காட்டுக்குள் காய்ந்த சருகுகள் மீது அவர் வேகமாக ஓடியதால் எழுந்த சத்தமும், அவரது கர்ணகடூரமான குரலும் துறவியின் தியானத்தைக் கலைத்தது. கோபத்தோடு அவர் எழுந்திருக்க, அந்த ஆசாமி அதைக் கவனிக்கவில்லை. காட்டின் உள்பக்கமாகப் பார்வையை வீசியபடி துறவியைத் தாண்டிப் போய்விட்டார். துறவியின் கோபம் எரிமலை மாதிரி பொங்கி வழிந்தது. ‘இந்த வழியாகத்தானே அவர் திரும்பி வர வேண்டும்...

வரட்டும், பார்த்துக்கொள்ளலாம்!' என்று காத்திருந்தார் துறவி.

சிறிது நேரம் கழித்து ஒரு சிறுவனைத் தன் தோளில் சுமந்தபடி அந்த ஆசாமி வந்தார். அவரை வழிமறித்த துறவி, "உங்களுக்குப் பொறுமை இல்லையா? நான் தியானத்தில் இருந்ததை நீங்கள் பார்க்கவில்லையா? சத்தம் போட்டு, ஆர்ப்பாட்டம் செய்து என் தியானத்தைக் கலைத்துவிட்டீர்களே" என்று கோபத்தோடு கேட்டார்.

அவர் பயந்து நடுங்கிவிட்டார். பணிவுடன் துறவியைக் கும்பிட்டு, "என்னை மன்னித்துவிடுங்கள், நீங்கள் அமர்ந்திருந்ததை நான் கவனிக்கவில்லை" என்று சொன்னார். துறவி சமாதானமாகவில்லை. "என்ன? நான் அமர்ந்திருந்ததைக் கவனிக்கவில்லையா? உனக்குக் கண் தெரியாதா?" என்று மீண்டும் கோபம் காட்டினார்.

அந்த மனிதர் நிதானமாக, "இல்லை சுவாமி! என் மகன் மாலையில் தன் நண்பர்களோடு விளையாட காட்டுப்பக்கம் வந்தான். அவனோடு வந்த எல்லோரும் திரும்பிவிட்டார்கள். அவன் மட்டும் வரவில்லை. ஏதாவது குளத்தில் விழுந்திருப்பானோ... கொடிய விலங்குகளிடம் மாட்டிக் கொண்டிருப்பானோ என்ற பயத்தில் அவனைத் தேடி ஓடினேன். என் நினைப்பெல்லாம் அவன் மீதே இருந்ததால் நான் உங்களைக் கவனிக்கவில்லை" என்று சொல்லி மீண்டும் மன்னிப்புக் கேட்டார்.

துறவி விடுவதாக இல்லை. "காரணம் எதுவாக இருந்தாலும், இறைவனை நினைத்து தியானத்தில் ஈடுபட்டிருந்த எனக்குத் தொல்லை கொடுத்தது தவறு" என்றார்.

அந்தக் கிராமத்து ஆசாமி நிதானமாகத் துறவியைப் பார்த்து, "தியானத்தில் மூழ்கியிருந்த உங்களுக்கு நான் ஓடியது, கத்தியது எல்லாமே தெரிந்தது. அதனால் உங்கள் தியானமும் கலைந்தது. ஆனால் மகனைத் தேடி ஓடிய நான் கண்முன்னே இருந்த உங்களைக் கவனிக்கவில்லை. எனக்கு என் மகன் மீது மட்டுமே ஈடுபாடு இருந்தது. அதனால் வேறு எதுவும் என் கண்களுக்குத் தெரியவில்லை. ஆனால், நான் எழுப்பிய சாதாரண சத்தமே உங்கள் தியானத்தைக் கலைத்துவிட்டது என்றால் எப்படி? என் குழந்தையிடம் எனக்குள்ள ஈடுபாடுகூட உங்களுக்கு இறைவன் மீது இல்லையே! ஈடுபாடு இல்லாத இந்தத் தியானத்தால் உங்களுக்கு என்ன பலன் கிடைக்கும்?" என்று கேட்டார்.

துறவிக்கு அப்போதுதான் தனது தவறு உறைத்தது. தனக்கு ஞானத்தை அளித்த அந்தக் கிராமத்து ஆசாமியை வணங்கிவிட்டு அங்கிருந்து கிளம்பினார்.

எந்த வேலையைச் செய்தாலும் அதில் முழுமையான ஈடுபாடு காட்ட வேண்டும். அப்படி மூழ்குபவர்கள்தான் ஜெயிக்கிறார்கள். பிரார்த்தனையும் அப்படிப்பட்டதே! நிறைய பேர் ஏதேதோ தேவைகளுக்காகப் பிரார்த்தனை செய்வார்கள். 12 பி பஸ் உடனே வர வேண்டும் என்று பஸ் ஸ்டாண்டில் நின்றபடி பொறுமையிழந்து வேண்டுதல் செய்யும் ஒருவர் முன் கடவுள் தோன்றி, "உனக்கு என்ன வரம் வேண்டும்" என்று கேட்டால், "அந்த பஸ்ஸை உடனே வரச்சொல்லு... உன்னை யாரு கூப்பிட்டா?" என்று சொன்னாலும் சொல்வார்.

கடவுள் நம் எதிரில் தோன்றி, "என்ன வேண்டும்" என்று புன்னகையுடன் கேட்டால், அவர் தாள் பணிந்து "நீதானப்பா வேண்டும்! உன்னைவிடச் சிறந்தது எதுவுமே இல்லை. நீயே வந்திருக்கிறபோது உன்னைவிடக் குறைவான ஒன்றை உன்னிடத்தில் நான் பெற்றுக்கொள்ள முடியுமா" என்று சொல்வதுதான் ஈடுபாடுள்ள பிரார்த்தனை. ●


RAMRAJ காட்டன்

# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 8 இதழ் 1

ஜூலை 2023

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

குதிரைப்பந்தயங்களில்பங்கேற்கும்குதிரைகளுக்குப் பயிற்சி தரும் ஒருவருக்கு மகனாகப் பிறந்தான் மான்டி ராபர்ட்ஸ். அப்பா அமெரிக்காவின் ஒவ்வொரு நகரத்துக்கும் போவார். அங்கு குதிரைகளை வளர்க்கும் பண்ணை முதலாளிகளிடம் தன் திறமையை விளக்குவார். அவர்களின் குதிரைப் பண்ணையில் இருக்கும் குதிரைகளுக்குப் பயிற்சி தருவார்.

திறமையான பயிற்சியாளர் அவர். ஒரு பண்ணையில் இருக்கும்எந்தெந்தக்குதிரைகள்பந்தயங்களுக்கு ஏற்றவை என்று ஓரிரு நாட்களிலேயே கண்டுபிடித்துவிடுவார். அவற்றைத் தனியாகப் பிரித்து வைத்துக் கச்சிதமாகப் பயிற்சி தருவார். சில மாதங்கள் பயிற்சி கொடுத்தாலே அவை ஜெயிக்கும் தகுதியைப் பெற்றுவிடும். பந்தயங்களில் பரிசுகளைக் குவிக்க ஆரம்பிக்கும். குதிரைப்பண்ணை முதலாளிகள் ரொம்பவே சாமர்த்தியசாலிகள். தங்கள் வேலையாட்களை வைத்து சாமர்த்தியமாக மான்டி ராபர்ட்ஸ் அப்பாவின் பயிற்சிமுறைகளைக் கற்றுக்கொள்ளச் செய்துவிடுவார்கள். அதன்பின் அந்த மனிதரைத் துரத்திவிடுவார்கள்.

இதனால்மான்டிராபர்ட்ஸ்பத்தாம்வகுப்பைஎட்டுவதற்கு முன்பாகவே பல பள்ளிகளுக்கு மாறியிருந்தான். அந்த வகுப்பில் ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் ஒரு பயிற்சியைக் கொடுத்திருந்தார். 'வளர்ந்த பிறகு நீங்கள் என்னவாக ஆகப் போகிறீர்கள்? உங்கள் கனவு என்ன? அதை விவரித்து ஒரு கட்டுரை எழுதுங்கள்' என்பதுதான் மாணவர்களுக்குக் கொடுத்திருந்த பயிற்சி.


# ஈடுபாட்டுடன் கனவு காணுங்கள்!



மான்டி விடுமுறை நாட்களில் தன் தந்தையுடன் குதிரைப்பண்ணைகளுக்குச் செல்வான். அவனுக்குக் குதிரைகளைப் பிடித்தது. குதிரைகள் தங்களுக்குள் உடலை அசைத்து அசைத்து, பாடி லாங்குவேஜ் மூலம் பேசிக்கொள்வதை அவன் கண்டறிந்தான். பயம், குழப்பம், அன்பு, மகிழ்ச்சி என்று ஒவ்வொன்றையும் அவை எப்படி வெளிப்படுத்துகின்றன என்று புரிந்துகொண்டான். சுருக்கமாகச் சொல்வதென்றால், குதிரைகளின் மொழி அவனுக்குத் தெரியும். அந்த வயதிலேயே அவன் குதிரைகளுடன் பேசி அவற்றை வசப்படுத்தக் கற்றிருந்தான். தந்தையைவிடச் சிறந்த குதிரைப் பயிற்சியாளராக வேண்டும் என்பது அவன் கனவு.

ஆசிரியர் சொன்ன அந்த இரவிலேயே அவன் ஏழு பக்கத்துக்கு விளக்கமாக ஒரு கட்டுரை எழுதினான். ஒரு பெரிய குதிரைப்பண்ணைக்கு உரிமையாளர் ஆகி, அந்தக் குதிரைகளுக்குப் பயிற்சி தந்து பல பந்தயங்களில் ஜெயிக்க வேண்டும் என்ற தனது கனவை அவன் ஈடுபாட்டுடன் விவரித்திருந்தான். அந்தக் கனவு எந்த அளவுக்குச் சிறப்பாக இருந்தது என்றால், அவன் தனது குதிரைப்பண்ணையை அழகிய படமாகவும் வரைந்திருந்தான். 200 ஏக்கர் நிலத்தில் பண்ணை, அதற்குள் குதிரை லாயங்கள், குதிரைகள் ஓடிப் பயிற்சி எடுக்க ரேஸ் ட்ராக்குகள், குதிரைகளைக் குளிப்பாட்ட குளங்கள் என்று எல்லாமே அதில் இருந்தன. அந்தக் குதிரைப்பண்ணையின் மத்தியில் 4,000 சதுர அடியில் அழகிய மாளிகை ஒன்றையும் அவன் வசிப்பதற்காக என்று வரைந்திருந்தான். 'இதுதான் என் கனவுக் குதிரைப்பண்ணை' என்று எழுதி அடுத்த நாளே ஆசிரியரிடம் கொடுத்தான்.

இரண்டு நாட்கள் கழித்து ஆசிரியர் அவனைக் கூப்பிட்டார். "உனக்கு நான் பூஜ்ஜியம் மார்க்தான் போடுவேன்" என்றார். "ஏன்?" என்று ஏமாற்றத்துடன் கேட்டான் மான்டி ராபர்ட்ஸ். "உன் கனவு நம்புகிற மாதிரியே இல்லை. உன்னிடம் பணம் கிடையாது. ஒரு நாடோடிக் குடும்பத்தில் பிறந்தவன் நீ. உன் அப்பாவுக்கு சொத்து எதுவும் இல்லை, சொந்த வீடும் இல்லை. ஒரு குதிரைப்பண்ணை அமைப்பதற்குப் பெரும் பணம் வேண்டும். நிலம் வாங்க வேண்டும், தரமான உயர்ஜாதிக் குதிரைகளை நிறைய பணம் செலவழித்து வாங்க வேண்டும். அவற்றைப் பராமரிக்கவும் பணம் செலவாகும். பந்தயங்களில் பங்கேற்க லைசென்ஸ் வாங்க வேண்டும். இதெல்லாம் நடக்கிற விஷயமா? இந்த பேப்பரை உன்னிடமே திருப்பித் தருகிறேன். உன் தகுதிக்கு ஏற்றபடி நம்புகிற மாதிரி எதையாவது எழுதிக்கொண்டு வா! நல்ல மார்க் போடுகிறேன்" என்றார் ஆசிரியர்.



மான்டி சோகத்துடன் தன் கனவு பேப்பரை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான். நடந்ததை அப்பாவிடம் சொன்னான். "இது முக்கியமான விஷயம். அவசரப்பட்டு எதையும் செய்துவிடாதே! உன் எதிர்காலம் தொடர்பான கனவு இது. நீ என்னவாக ஆகப்போகிறாய் என்பதை நீதான் தீர்மானிக்க வேண்டும்" என்றார் அப்பா.

இரவு முழுக்க யோசித்த மான்டி, அடுத்த நாள் தெளிவான தீர்மானத்துடன் பள்ளிக்குப் போனான். அதே கனவு பேப்பரை ஆசிரியரிடம் கொடுத்தான். "உங்கள் மார்க்கை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள், என் கனவை நான் வைத்துக்கொள்கிறேன்" என்றான்.

20 ஆண்டுகளில் மான்டியின் கனவு நிஜமானது. தான் வரைந்து வைத்திருந்த அதே வடிவத்தில் குதிரைப்பண்ணையை உருவாக்கினார். அதன் மத்தியில் அழகிய மாளிகை கட்டிக் குடியேறினார். தான் படித்த பள்ளிக்குச் சென்று, தன் கனவு பேப்பரைத் தேடி வாங்கிவந்து, அழகாக ஃபிரேம் போட்டு ஹாலில் மாட்டினார்.

சில மாதங்களில் அவரின் ஆசிரியர், தன்னிடம் படிக்கும் மாணவர்களைக் குதிரைப்பண்ணையைச் சுற்றிக்காட்டக் கூட்டி வந்திருந்தார். மான்டி எந்தக் கசப்புணர்வும் இல்லாமல் அவரை வரவேற்றார். "என்னை மன்னித்துவிடு மான்டி! உன்னைப் போன்ற பல குழந்தைகளின் கனவுகளைச் சிதைப்பவராக நான் இருந்திருக்கிறேன். எத்தனை பேரின் கனவுகள் என்னால் கலைந்துபோனதோ தெரியவில்லை. அதிர்ஷ்டவசமாக உனக்கு உன் கனவின் மீது அதீத ஈடுபாடு இருந்தது. அதனால் என்னால் சிதைக்க முடியவில்லை" என்றார் ஆசிரியர்.

''யார் என்ன சொன்னாலும், உங்கள் மனம் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் கனவுகளை யாரும் சிதைக்க அனுமதிக்காதீர்கள்" என்று சொல்லும் மான்டி, இப்போது உலகப் புகழ்பெற்ற குதிரைப் பயிற்சியாளர். பல நாடுகளின் அதிபர்களே அவரைச் சந்திப்பதைப் பெருமையாக நினைக்கிறார்கள்.

'ஒவ்வொரு மனிதருக்கும் ஆயிரக்கணக்கான கனவுகள், ஒவ்வொன்றையும் அடைவதற்காக எதையும் செய்யலாம். ஒன்றை அடைந்தாலும், இன்னொன்றைத் தேடி மனம் ஓடியபடி இருக்கும்.' புகழ்பெற்ற உருது கவிஞர் மிர்ஸா கலிப் எழுதிய புகழ்பெற்ற வரிகள் இவை. ஒவ்வொருவருக்கும் இவை பொருந்தும். வெற்றிகரமான ஒரு விளையாட்டு வீரர், ஒரு போட்டி முடிந்த அடுத்த நாளே இன்னொரு போட்டிக்கான பயிற்சியில் இறங்கிவிடுகிறார். எங்கும் தேங்கி நின்றுவிடுவதில்லை. குழந்தையைப் போலக் கனவுகள் காணுங்கள், நதியைப் போல ஓடிக்கொண்டிருங்கள்!




## சர்வதேச யோகா தின விழா!

உலக சமுதாய சேவா சங்கத்தின் திருப்பூர் மண்டலம் சார்பில் சர்வதேச யோகா தின விழா, ஜூன் 21 அன்று திருப்பூர் ஜெய்வாபாய் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி கலையரங்கில் கொண்டாடப்பட்டது. மனவளக்கலை மன்றம் அறக்கட்டளைகள் மற்றும் தவமையங்களும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தின.

உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவரும், ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. K.R. நாகராஜன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தி இந்த விழாவைத் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, சங்கத்தின் திருப்பூர் மண்டலச் செயலாளர் திரு. A.V. பழனிசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவரும், ஆழியாறு அறிவுத் திருக்கோயில் அறங்காவலருமான திரு. K.M. சுப்பிரமணியம் அவர்கள், பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி. அ.ஸ்டெல்லா அமலோற்பவ மேரி அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருப்பூர் மாநகராட்சியின் துணை மேயர் மதிப்பிற்குரிய MKM. பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையில், திருப்பூர் மாநகராட்சி மேயர் மாண்புமிகு N. தினேஷ்குமார் அவர்கள் சிறப்புரையாற்றினார். திருப்பூர் மண்டலத் தலைவர் திரு. N. கருணாநிதி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

நிகழ்வில் ஆயிரக்கணக்கான மாணவிகள் இணைந்து பிரமாண்டமான யோகா செய்முறைப் பயிற்சியை ஒரு மணி நேரத்துக்கும் மேலாகச் செய்தனர்.

## பாடல் போட்டியில் ரூ. 5 லட்சம் பரிசு வழங்கிய ராம்ராஜ்

ஜீ தமிழ் தொலைக்காட்சியில் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இரவு 8 மணிக்கு ஒளிபரப்பாகி வந்த நிகழ்ச்சி, 'சரிகமப சீசன் 3'. இந்த நிகழ்ச்சியின் கிராண்ட் ஃபைனல் ஜூன் 18–ம் தேதி கோலாகலமாக நடைபெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் இரண்டாம் பரிசு வென்ற திருமிகு. ராகவர்ஷினி அவர்களைப் பாராட்டி, அவருக்குப் பரிசாக 5 லட்சம் ரூபாயை ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் சார்பாக நிறுவனர் திரு. K.R. நாகராஜன் மற்றும் சுமதி நாகராஜன் இணைந்து வழங்கினர். சரிகமப நிகழ்ச்சியின் நடுவர்கள், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் ஜீ தமிழ் தொலைக்காட்சி அதிகாரிகள் உடன் இருந்தனர்.




# கொங்கு நிறுவனத்தின் விழாவில் ராம்ராஜ்!

கொங்கு பன்னாட்டு வர்த்தகம் மற்றும் கலாசார நிறுவனமான 'கிட்கோ' அமைப்பின் இரண்டாம் ஆண்டு தொடக்க விழா, சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இதில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்த விழாவில், கொங்கு சமுதாயத்தில் முதன்முறையாகத் தொழில் முனைவோரைப் பாராட்டும் வகையில், பொன் பியூர் கெமிக்கல்ஸ் தலைவர் திரு. M. பொன்னுசாமி அவர்களுக்கு கிட்கோ வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது. மேலும் மாவட்டம்தோறும் சிறந்த தொழிலதிபர்களைத் தேர்வுசெய்து 15–க்கும் மேற்பட்டவர்களுக்குச் சாதனையாளர்கள் விருது வழங்கப்பட்டது. கொங்கு தொழில் முனைவோர் பற்றிய விவரங்கள் அடங்கிய, KITCO International Business Directory வெளியிடப்பட்டது. கொங்கு தொழில் முனைவோர்களின் உற்பத்திகளை உலகம் முழுவதும் காட்சிப்படுத்தும் விதமாக முதன்முறையாக KITCO EXPO–2023 பொருட்காட்சியும் நடைபெற்றது. கொங்கு நாட்டின் பாரம்பரியம் மற்றும் கலைகளைப் போற்றும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

'தாங்கள் வருகை தந்து கலந்துகொண்டது அனைவருக்கும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுத்தது. சிறப்புரையில் நீங்கள் பகிர்ந்துகொண்ட கருத்துகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. உங்களைப் போன்று தொழிலில் உச்சங்களைத் தொட்டவர்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளும்போது, அது இளம் தலைமுறைத் தொழில்முனைவோர்கள் திறம்படச் செயல்பட உதவியாக இருக்கிறது. உங்களது நேரத்தை ஒதுக்கி இந்த மாபெரும் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டதற்கு மனமார்ந்த நன்றி' என திரு. K.R. நாகராஜன் அவர்களுக்கு கிட்கோ நிர்வாக இயக்குநர் திரு. க.பாலசுப்ரமணியன் நன்றி தெரிவித்தார்.






# உங்கள் விதியை மாற்றும் ஈடுபாடு!

ரயிலில் யாசகம் செய்துகொண்டிருந்தார் ஒருவர். நெரிசலாக இருந்த பெட்டிக்குள் ஏறி, எல்லோரும் இளகும் அளவுக்குக் குரலில் கண்ணீரைக் கலந்து பேசி யாசகம் கேட்க வேண்டும். அடுத்த ஸ்டேஷனில் கவனமாக இறங்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் டிக்கெட் பரிசோதகர்களின் கண்ணில் சிக்கிப் பிரச்னையாகிவிடும். இத்தனை பிரச்னைகளுக்கு நடுவில் கெஞ்சிக் கேட்டால், ரயில் பெட்டியில் இருக்கும் 100 பேரில் நான்கைந்து பேர் ஏதாவது சில்லரைக் காசுகளைக் கையில் தூக்கிப் போடுவார்கள். சில நாட்களில் சாப்பிட முடியும். சில நாட்கள் ஒரு தேநீர் குடிக்கும் அளவுக்கே பணம் சேரும். 'இந்த உலகத்திலேயே என் அளவுக்குப் பரிதாபமானவர்கள் யாருமில்லை' என்று நினைத்தபடி நாட்களை நகர்த்திக் கொண்டிருந்தார் அவர்.

ஒருநாள் ரயிலில் யாசகம் செய்துகொண்டிருந்தபோது, பளீர் வெள்ளை ஆடைகளுடன் ஒரு பெரிய மனிதரைக் கவனித்தார். 'இவர் பெரிய பணக்காரராக இருக்க வேண்டும். இவரிடம் கேட்டால் நிச்சயமாக நிறைய பணம் தருவார்' என்று நினைத்தபடி அவரை நெருங்கி யாசகம் கேட்டார்.

அந்தப் பெரிய மனிதர் நிமிர்ந்து பார்த்து, ''நீங்கள் எப்பொழுதும் பிச்சையெடுத்துக் கொண்டே இருக்கிறீர்களே, யாருக்காவது ஏதாவது கொடுக்கிறீர்களா?" என்று கேட்டார். இவர் தயங்கி, "ஐயா, நான் ஒரு பிச்சைக்காரன். நான் பிச்சை கேட்க மட்டுமே முடியும். என்னிடம் என்ன இருக்கிறது கொடுப்பதற்கு" என்று விரக்தியுடன் சொன்னார். "நீங்கள் யாருக்கும் எதையும் கொடுக்க முடியாதபோது, அவர்களிடம் எதையும் கேட்க உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை" என்று தீர்மானமாகச் சொன்னார் அந்தப் பெரிய மனிதர்.

அடுத்த ஸ்டேஷனில் இறங்கிய இவர் யோசிக்க ஆரம்பித்தார். அந்த வார்த்தைகள் ஏதோ செய்தன. 'நான் யாருக்கும் எதையும் கொடுக்க முடியாததால், எனக்கு யாசகம் செய்யும்போது அதிக பணம் கிடைப்பதில்லை. நான் யாருக்கும் எதையும் கொடுக்கத் தகுதியற்றவன் என

ஏன் நினைக்க வேண்டும்? எத்தனை நாளைக்குத்தான் எதையும் கொடுக்காமல் மக்களிடம் கேட்டுக்கொண்டே இருப்பேன்! எனக்கு மக்கள் யாசகம் தரும்போது, நான் பதிலுக்கு ஏதாவது தருவேன்" என்று தீர்மானித்தார்.

என்ன தருவது? இந்தக் கேள்விக்குப் பதில் எதுவும் கிடைக்கவில்லை. பூக்கூடை ஒன்றுடன் ரயிலேற வந்த மூதாட்டியைப் பார்த்தார். அவருக்கு உடனே யோசனை உதித்தது. தான் யாசகம் செய்து வைத்திருந்த மொத்தக் காசையும் மூதாட்டியிடம் கொடுத்து ரோஜாப் பூக்களை வாங்கினார். பழைய பிரம்புக்கூடை ஒன்றை மூதாட்டியிடமே கடன் வாங்கி, அதில் பூக்களை வைத்துக்கொண்டு மீண்டும் ரயில் ஏறினார். யாசகம் கேட்டார். அவருக்கு சில்லரைகளைக் கொடுத்த ஒவ்வொரு பயணிக்கும் நன்றி சொல்லி, பூ எடுத்துக்கொள்ளச் சொன்னார். சிலர் மறுப்பார்கள்; சிலர் ஆச்சர்யத்துடன் எடுப்பார்கள்; சிலர் இரண்டு பூக்கள்கூட எடுப்பார்கள். எல்லாவற்றையும் அவர் புன்னகையுடன் ஏற்றார். அந்த நாளில் அவர் வழக்கத்தைவிட அதிக பணத்தை யாசகம் செய்து சேர்த்திருப்பதை உணர்ந்தார்.

அடுத்தடுத்த நாட்களில் அவர் இதையே தொடர்ந்தார். 'சில்லரை கொடுத்தால் பூக்களைக் கொடுக்கும் வித்தியாசமான யாசகர்' என்று ரயிலில் பிரபலமானார். தினம் தினம் முன்பைவிட அதிகமாகப் பணம் சேர்ந்தது. இப்போது அவரால் நன்றாகவே சாப்பிட முடிந்தது. ஒரு நாள் அவர் ரயிலில் யாசகம் செய்தபோது, அதே பெரிய மனிதர் அமர்ந்திருப்பதைக் கண்டார். அவரிடம் சென்று யாசகம் கேட்டபடி, "இன்று உங்களுக்குக் கொடுக்க என்னிடம் பூக்கள் உள்ளன" என்று பூக்களையும் நீட்டினார்.

அந்தப் பெரிய மனிதர் பணம் கொடுத்துவிட்டு, இரண்டு பூக்களை எடுத்துக்கொண்டார். "இன்னும் ஏன் யாசகம் கேட்கிறாய்? நான் கொடுக்கும் பணத்துக்கு நீ பூ கொடுக்கிறாய். நீயும் என்னைப் போல் வியாபாரி ஆகிவிட்டாய்" என்றார். அன்று அந்த யாசகர் ஏதோ வெளிச்சத்தைக் கண்டது போன்ற உணர்வுடன் ரயிலிலிருந்து இறங்கினார். தனது வாழ்க்கையை மாற்றக்கூடிய வெற்றிக்கான பாதை திறந்திருப்பதாக உணர்ந்தார்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதே ரயிலில் அந்தப் பெரிய மனிதர் பயணம் செய்தார். உயர்தரமான வெள்ளை வேட்டி – சட்டை அணிந்த கம்பீரமான மனிதர் ஒருவர் அவர் அருகில் வந்து அமர்ந்தார்.



பெரிய மனிதரைப் பார்த்ததும் அதிர்ந்து, எழுந்து நின்று கைகூப்பி வணங்கினார். "என்னை அடையாளம் தெரிகிறதா?" என்றார். தயக்கத்துடன் உதட்டைப் பிதுக்கி, "இப்போதுதான் முதன்முதலாகப் பார்க்கிறேன்" என்றார் பெரிய மனிதர்.

"இல்லை ஐயா! இது மூன்றாம் முறை" என்றார் அந்த முன்னாள் யாசகர். பழைய சம்பவங்களை நினைவுகூர்ந்தார். "என்னை வியாபாரி ஆகிவிட்டதாகச் சொன்னீர்கள். இன்று நான் மிகப் பெரிய பூ வியாபாரி. ஊர் ஊராகச் சென்று பூக்களை வாங்கி மார்க்கெட்களுக்கு அனுப்புகிறேன். என்னிடம் 100 பேர் வேலை பார்க்கிறார்கள். எல்லா மாற்றமும் நீங்கள் சொன்னதால் நடந்தவை. பிச்சைக்காரனாக என்னை நினைத்தவரை பிச்சைக்காரனாகவே இருந்தேன். வியாபாரியாக உணர்ந்த அடுத்த நிமிடத்திலிருந்து வாழ்க்கை மாறியது" என்று பரவசப்பட்டார். "நாம் எதை நம்புகிறோமோ அதுவாக மாறுவோம்..." என்று கைகுலுக்கிச் சொன்னார் பெரிய மனிதர்.

ஈடுபாட்டுடன் நாம் எதைச் செய்தாலும், அதுவாகவே மாறிவிடுவோம். நம் விதையை ஈடுபாடு கொண்டு மாற்றுவதற்குச் சில வழிகள்:

❖ கடல் முழுக்கத் தண்ணீர் இருந்தாலும், கப்பல் அனுமதித்தால்தான் அதற்குள் கடல் தண்ணீர் செல்ல முடியும். நம் கவலைகளும் குழப்பங்களும், நம் அனுமதியின்றி நம் மனதுக்குள் வந்து உட்கார முடியாது. எப்படிப்பட்ட நெருக்கடியிலும், எவ்வளவு மோசமான தோல்வியிலும் மனக்கவலை கூடாது.

❖ தோல்வியில் சோர்வு கூடாது. தோல்விகள் இல்லாமல் வெற்றி இல்லை. மனத்தைப் புத்துணர்வுடன் வைத்திருங்கள். எதையும் சாதிக்கலாம். முடியாதது என்று எதுவும் இல்லை. நம்பிக்கை கொள்ளுங்கள். தன்னம்பிக்கை இருந்தால், எதையும் சாதிக்கலாம்.

❖ எண்ணங்கள் நேர்மறையாக இருக்க வேண்டும். இலக்குகள் உயர்ந்தவையாக இருக்க வேண்டும். வெறும் சிந்தனை மட்டுமே வெற்றி தராது. அதை அடைவதற்குத் திட்டமிட வேண்டும். இடைவிடாத முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

❖ உங்களுக்கு ஒரு செயலில் ஆர்வம் இருந்தால் முயற்சி தானாகவே வந்துவிடும். கடுமையான உழைப்பும் அதனுடன் சேர வேண்டும். முயற்சியும் உழைப்பும் இருந்தால் முன்னேற்றம் நிச்சயம்.

❖ அடிக்கடி குழம்பிப் போய், 'இதைவிட வேறு செயலில் சீக்கிரம் ஜெயிக்கலாம்' என்று திசைமாறக் கூடாது. தெளிவாகத் திட்டமிட வேண்டும். இலக்கில் வெற்றி பெறும்வரை பொறுமையாக இருக்கவேண்டும். குறிக்கோள்களைக் கைவிடாதவர்கள் நிச்சயம் உயர்வார்கள். ●



## பலவீனங்கள் பாதிக்காது!

எதையும் ஈடுபாட்டுடன் செய்ய நினைக்கும் ஒருவருக்கு இருக்கும் எந்த பலவீனமும் அவர் வெற்றியைத் தடுக்காது. புகழ்பெற்ற இசை மேதை பீத்தோவன், காது கேளாதவர். 'இசை ஞானம் இல்லாதவர்' என்று இளம் வயதில் எல்லோராலும் ஒதுக்கப்பட்டவர். ஆனால், பிற்காலத்தில் உலகிலேயே உன்னதமான இசையை உருவாக்கியவர் என்று புகழப்பட்டார். மிகச் சிறந்த அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவராகக் கருதப்படுகிறவர் ஃப்ராங்க்ளின் ரூஸ்வெல்ட். தன் பதவிக்காலத்திலேயே உடல்நலமின்றி ஆகி, சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி இயங்கியவர். இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கப் படைகளை அந்த நிலையிலும் வழிநடத்தி மாபெரும் வெற்றி கண்டார்.

## கைவிடாமல் தொடருங்கள்!

முதன்முதலாக நீச்சல் என்ற கலையைக் கற்ற மனிதனை நினைத்துப் பாருங்கள். மற்றவர்களைப் போல அவனும் கடலையும் ஆறுகளையும் பார்த்துப் பயந்திருப்பான். குளத்தில் இறங்கியதும், 'நாம் மூழ்குகிறோமே' என்று நடுங்கிப் பின்வாங்கியிருப்பான். ஆனால், பறவைகளும் சில உயிரினங்களும் தண்ணீரின் மீது நீந்திச் செல்வதைப் பார்த்தபோது அவனுக்கு நம்பிக்கை வந்திருக்கும். அதேபோல முயற்சி செய்து பார்த்திருப்பான். தினம் தினம் வித்தியாசமாகத் தொடர்ந்த அந்த முயற்சிகள் ஒரு கட்டத்தில் அவனுக்கு வெற்றியைக் கொடுத்திருக்கும். ஏனெனில், அவன் ஈடுபாடு காட்டி முழுமுச்சாக செய்த முயற்சி அது.

சாதாரண மனிதர்களுக்கும் ஈடுபாடு காட்டும் மனிதர்களுக்கும் சின்ன வித்தியாசம்தான். எல்லோரும் கஷ்டங்களை எதிர்கொள்வார்கள். ஆனால், பொறுமையுடன் தொடர்ச்சியாக முயற்சி செய்தபடி இருந்தால் இதைக் கடந்து ஜெயிக்கலாம் என்று ஈடுபாட்டுடன் முயற்சி செய்வதே அந்த வித்தியாசம். கஷ்டங்களும் பிரச்னைகளும் வாழ்வின் அங்கம்தான். அவற்றையும் வழக்கமான உற்சாகத்துடன் எதிர்கொண்டு மீள வேண்டும் என்று இவர்கள் நினைப்பார்கள்.





## விதியை மாற்றலாம்!

எந்த வேலையையும் ஈடுபாட்டுடன் செய்யாமல் ஏனோதானோ என்று செய்பவர்கள், அதில் தோற்றுவிட்டால் விதியின் மீது பழியைப் போடுவார்கள். தங்கள் தவறுகளுக்கு யார் யாரையோ பொறுப்பாக்கும், சமயங்களில் கடவுளையே பொறுப்பாக்கும் இந்த விளையாட்டு அபத்தமானது. ஈடுபாடு இருந்தால், எந்த விதியையும் மாற்றலாம். சீட்டுக்கட்டு ஆடுவது தப்பான விஷயம்தான். அதிலும் ஒரு நீதி கிடைக்கிறது.

சீட்டுக்கட்டு ஆட்டத்தில் ஒருவருக்கு 13 சீட்டுகள் வந்து விழுகிறது. அந்த 13 சீட்டுகள் இப்படித்தான் வந்து விழ வேண்டும் என்பது விதி என்றால், அவற்றை வைத்து ஒருவர் எப்படி விளையாடி ஜெயிக்கிறார் என்பது அவருடைய மதியைப் பொறுத்த விஷயம். திறமையும் ஈடுபாடும் இருந்தால், விதியை மாற்றலாம்.

## ஈடுபாட்டுடன் பணியாற்றியவர்!



அமெரிக்காவில் ஒரு வீடு தீப்பிடித்து எரிவதாக போன் வந்ததும், தீயணைப்பு வாகனம் விரைந்து சென்றது. வீட்டை நெருங்கியதும் வாகனத்திலிருந்து இறங்கிய வீரர் ஜெஃப் கிளார்க், வீட்டுக்குள் போனார். மற்ற வீரர்கள் வெளியிலிருந்து தீயை அணைக்க, 'உள்ளே யாராவது சிக்கியிருக்கிறார்களா' என்று வீட்டுக்குள் எப்படியாவது சென்று பார்க்க வேண்டியது இவர் கடமை.

ஒரு ஜன்னலை உடைத்துக்கொண்டு உள்ளே குதித்தவர், புகைமூட்டத்தில் கண் எரிச்சலைத் தாங்கிக்கொண்டு எல்லா அறைகளையும் பார்த்தார். உள்ளே பயங்கரத் தோற்றத்தில் நாய் ஒன்று, மரண பயத்தில் குரைத்தபடி நின்றிருந்தது. அதன் உயரத்தையும் தோற்றத்தையும் பார்த்தபோது அவருக்கு பயம் வந்தது. எத்தனையோ பேரைக் காப்பாற்றிய அவருக்கு, ஒரு நாயை எதிர்கொள்வது புதிது.

'இதைத் தூக்கினால், நாம் காப்பாற்றுகிறோம் எனப் புரிந்துகொள்ளுமா? அல்லது, நம்மைக் கடித்துவிடுமா?' என்று அவருக்குள் யோசனை. 'என்ன ஆனாலும் பரவாயில்லை. தீயில் சிக்கியிருக்கும் ஓர் உயிரைக் காப்பாற்றுவது நம் கடமை' என அதை நெருங்கினார். அதைத் தடவிக்கொடுத்து அப்படியே தூக்கிக்கொண்டு ஜன்னலைத் தாண்டி வெளியில் குதித்தார். அதை பத்திரமாக ஓரிடத்தில் கிடத்திவிட்டு, தீயை அணைப்பதில் மற்றவர்களோடு இணைந்தார்.

முழுதாகத் தீயை அணைத்து முடித்த பிறகே கிளார்க்குக்கு அந்த நாயின் ஞாபகம் வந்தது. திரும்பி அதைப் பார்த்தார். நாய் அவரை நோக்கி ஓடி வந்தது. மற்ற வீரர்கள் பதற்றமாகப் பார்க்க, ஓடி வந்த நாய் அன்பாக கிளார்க் முகத்தில் முத்தமிட்டது. விலங்குகளும் உணர்வுகளை வெளிப்படுத்தும் என்பதைக் காட்டும் உலகப் புகழ்பெற்ற சாட்சியாக அந்தக் காட்சி ஆகிவிட்டது.

## கனவைத் தொடவைத்த ஈடுபாடு!

நவீன காலத்தின் மிகச்சிறந்த விஞ்ஞானியாகவும் கண்டுபிடிப்பாளராகவும் கருதப்படுபவர் மைக்கேல் ஃபாரடே. மின்சாரம், மின்காந்தவியல் தொடர்பான அவரது ஆராய்ச்சிகள்தான் இன்று வாகனங்களும் ரயில்களும் இயங்குவதற்கு அடிப்படைக் காரணம். அவர் உருவாக்கிய கண்டுபிடிப்புகளே ஸ்மார்ட் போன் முதல் டெலிவிஷன் வரை எல்லாவற்றிலும் பயன்படுகின்றன.

லண்டனில் அழுக்கான புறநகர்ப் பகுதியில் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் ஃபாரடே. குடும்ப வறுமையும், அவருக்கு இருந்த பேசும்திறன் கோளாறும் அவர் கல்வியைப் பறித்தன. 13 வயதில் அச்சகத்தில் வேலைக்குப் போனார். அப்போதும் அவர் அறிவியல் நூல்களைப் படிப்பதை நிறுத்தவில்லை. அறிவியல் மீது அவருக்கு அத்தனை ஈடுபாடு.

குறிப்பாக மின்சாரம் பற்றிப் படித்தவருக்கு, புகழ்பெற்ற விஞ்ஞானி ஹம்ப்ரி டேவியிடம் உதவியாளராக வேலைக்குச் சேர வேண்டும் என்பது வாழ்நாள் கனவு. முறையான கல்வித்தகுதி இல்லாத ஃபாரடேவை, ஹம்ப்ரி டேவி ஆய்வகத்தில் பணிக்குச் சேர்த்துக்கொள்ள மறுத்தார்கள். பலமுறை முயன்று இறுதியாகத் தன் திறமையை நிரூபித்து டேவியிடம் வேலைக்குச் சேர்ந்தார் அவர். இருவரும் இணைந்து மின்சாரத்தில் இயங்கும்



மோட்டாரை உருவாக்கினார்கள். ஒரே நாளில் உலகப்புகழ் கிடைத்தது.

அந்த ஆய்வகத்தில் எத்தனையோ விஞ்ஞானிகள் இருந்தாலும், டேவியின் மரணத்துக்குப் பிறகு ஃபாரடே அதன் தலைமைப் பொறுப்புக்கு வந்தார். டைனமோ உள்ளிட்ட பல கண்டுபிடிப்புகளை அதன்பின் உருவாக்கினார். ஈடுபாடு இருந்தால், எப்படிப்பட்ட சவால்களையும் எதிர்கொண்டு வாய்ப்புகளை அடையலாம் என்பதற்கு ஃபாரடே சிறந்த உதாரணம்.●



# மாறாத ஈடுபாட்டுடன் வாழலாம்!

நிறைவான, அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வது என்பது ஒரு நீண்ட பயணம். பொறுமையும் ஈடுபாடும் அதற்கு வேண்டும். பலருக்கு வாழ்க்கையில் சில நேரங்களில் விரக்தி ஏற்படும். “எப்படி இருக்கீங்க” என்று கேட்டால், “ஏதோ வண்டி ஓடிக்கிட்டு இருக்கு” என்று சோகமாகச் சொல்வார்கள். வாழ்க்கை என்னும் ரயிலைத் தவற விட்டுவிட்ட பயணி போல இவர்களின் நிலை இருக்கும். தங்கள் பணிகளை ஈடுபாடே இல்லாமல் செய்வார்கள். வாழ்க்கையிலும் ஈடுபாடு வேண்டும்; உறவுகளுடன் பழகுவதிலும் ஈடுபாடு வேண்டும்; படிப்பு, வேலை, தொழில், வியாபாரம் என்று எதைச் செய்தாலும் அதில் ஈடுபாடு காட்ட வேண்டும். அப்படி இருப்பதற்கு சில வழிகள்:

● ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கும் ஓர் அர்த்தம் இருக்கும். மக்களுக்குப் பயன்தரும் கண்டுபிடிப்புகளைச் செய்வது ஒரு விஞ்ஞானியின் பணி. மாணவர்களை நல்வழிப்படுத்துவது ஒரு ஆசிரியரின் பணி. நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பது அரசு அலுவலரின் பணி. உங்கள் பணியின் அர்த்தம் என்ன? அதைக் கண்டறியுங்கள். உங்களின் பலம் என்ன, எதில் ஆர்வம் இருக்கிறது, எதைச் செய்தால் உங்களுக்கு மகிழ்ச்சியும் நிறைவும் கிடைக்கிறது, நீங்கள் எதற்கெல்லாம் வாழ்வில் மதிப்புக் கொடுக்கிறீர்கள் என்பதை வைத்து அதைத் தீர்மானியுங்கள்.

● உங்களின் வேலை அல்லது உழைப்பு, எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? அதை வைத்து உங்களின் இலக்குகளைத் திட்டமிடுங்கள். வேலையைத் தாண்டி உங்களுக்கு விருப்பமான பொழுதுபோக்கு, பகுதிநேர உழைப்பு, சேவை என்று எதற்கு வேண்டுமானாலும் நேரம் செலவிடுங்கள். நீங்கள் செய்யும் எந்த ஒரு விஷயமும் உங்களுக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். அதை மட்டுமே இலக்காகக் கொள்ளுங்கள்.

● மனிதர்கள் சமூகமாக வாழப் பிறந்தவர்கள். நாம் எதையும் ஈடுபாட்டுடன் செய்வதற்கு நம்மைச் சுற்றிப் பலர் உதவுவார்கள். நம்மைப் பாராட்டி, நம் செயல்களை உற்சாகத்துடன் ஆதரிக்கும் குடும்பத்தினர், உறவுகள், நண்பர்கள் ஆகியோர் அவசியம். அவர்களுடன் அர்த்தமுள்ள உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். எப்போதும் தொடர்பு அறுந்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

● எப்படிப்பட்ட சூழலிலும் ஈடுபாடு குறையாமல் உழைப்பதற்கு, உற்சாகமான மனநிலை அவசியம். தோல்விகளை வெற்றிக்கான வழிகளாகப் பாருங்கள், பின்னடைவுகளைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பாக நினையுங்கள். புதிய சூழ்நிலைகளைத் தயக்கமின்றி

ஏற்றுக்கொள்ளுங்கள். 'இதுதான் என் எல்லை' என்று நினைக்காமல், 'இதைத் தாண்டிச் சென்றால்தான் வளர்ச்சி' என்ற நேர்மறைச் சிந்தனையுடன் இருங்கள்.

● எப்போதும் புதுப்புது விஷயங்களை முயற்சி செய்து பார்ப்பது உங்கள் மனதை விசாலமாக மாற்றும். ஆர்வமும் ஈடுபாடும் குறையாதவராக உங்களை மாற்றும். புதிய இடங்களுக்குப் பயணம் செய்யுங்கள், புதிய மனிதர்களைச் சந்தியுங்கள், இதுவரை செய்யாத சாகசங்களைப் புதிதாகச் செய்து பாருங்கள். புதிய அனுபவங்களைத் தேடுவது உங்கள் வாழ்க்கையைச் சுவாரசியமாக்கும்.

● உற்சாகமும் ஈடுபாடும் குறையாமல் உழைக்க வேண்டுமென்றால், அதற்கு உடலும் மனமும் ஒத்துழைக்க வேண்டும். இரண்டின் நலனிலும் அக்கறை காட்டுங்கள். ஆரோக்கியமான வாழ்க்கைமுறை, சமச்சீர் சத்துக்கள் அடங்கிய உணவு, போதுமான உடற்பயிற்சி என எல்லாவற்றிலும் கவனமாக இருங்கள்.

● கூர் தீட்டப்படும் கோடரியே நன்கு வெட்டும். உங்கள் உழைப்பு கச்சிதமாக இருக்க வேண்டுமென்றால், போதுமான ஓய்வெடுத்து உங்களுக்கு மீண்டும் எனர்ஜியை ஏற்றிக்கொள்ள வேண்டும். நல்ல தூக்கம் முக்கியம். யோகா, தியானம், நல்ல சிந்தனைகள் உள்ள நூல்களைப் படிப்பது என்று உங்களைச் சீரமைத்துக்கொள்ளுங்கள்.

● கற்றுக்கொள்வதே, வளர்ச்சிக்கான மூல மந்திரம். நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், அதுசார்ந்து தொடர்ச்சியாகக் கற்றுக்கொள்ளுங்கள். உலக அளவில் நிகழும் மாற்றங்களைத் தெரிந்துகொண்டே இருப்பவர்கள், எந்தக் காலத்திலும் தேங்கிப் போவதில்லை.

● போக்குவரத்து சீராக இருப்பதற்காகச் சில விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. சாலைகள் நேர்த்தியாக இயங்க அவை உதவுகின்றன. அதேபோல நீங்கள் இயங்கவும் சில விதிகள் அவசியம். உங்களுக்கென ஒழுங்கு விதிகளை நீங்களே போட்டுக்கொள்ளுங்கள். எதற்காகவும் அந்த விதிகளை மீறாதீர்கள். 'இவரைப் போல விதிப்படி வாழும் மனிதரைப் பார்க்க முடியாது' என்று பெயர் எடுங்கள்.

● ஏதோ ஒரு சிறப்பான தருணத்துக்காகவோ, சரியான சூழல் அமைய வேண்டும் என்பதற்காகவோ காத்திருக்காதீர்கள். 'இதைச் செய்ய வேண்டும்' என்று தீர்மானித்துவிட்டால், உடனே அதை ஆரம்பியுங்கள். இன்று செய்ததைவிட, நாளை இன்னும் ஒரு படியேனும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் நினையுங்கள். எதிலும் ஈடுபாடு குறையாமல் வாழ்வீர்கள். ●

# வாசகர் கடிதங்கள்!



திருநெல்வேலி அரசு கூர்நோக்கு இல்லத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் குற்றம் புரிந்ததாகக் கருதப்படும் இளஞ்சிறார்களை நல்வழிப்படுத்தும் பணியைத் தமிழக அரசின் சமூகப் பாதுகாப்பு துறை மூலம் சிறப்பாகச் செய்து வருகிறோம். தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாடு சமூகநலத் துறை மற்றும் மகளிர் நலன் அமைச்சர் திருமதி. கீதாஜீவன் அவர்களின் சீரிய முயற்சியின் பேரில் சிறார்களுக்குத் தொழிற்பயிற்சி, கணினிப் பயிற்சி மற்றும் புத்தக வாசிப்பு போன்ற பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக 'வெண்மை' மாத இதழ், அரசு கூர்நோக்கு இல்லச் சிறார்களுக்கு ராம்ராஜ் காட்டன் நிறுவனம் சார்பாக இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

வெண்மை ஏப்ரல் மாத 'உதவி' சிறப்பிதழில் வெளிவந்த அனைத்துக் கட்டுரைகளையும் இங்குள்ள இல்லச் சிறார்கள் அனைவரும் படித்தனர். தங்களது வாழ்வில் எவ்வாறு பிறருக்குப் பயனுள்ள வகையில் வாழவேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டதாக என்னிடம் அவர்கள் தெரிவித்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மே மாத 'வெண்மை' இதழானது 'பெருமை' என்ற தலைப்பில் வெளிவந்தது. அதில் ராம்ராஜ் நிறுவனர் திரு. கே.ஆர். நாகராஜன் ஐயா எழுதிய கடிதம், சிறார்கள் மத்தியில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசினர் கூர்நோக்கு இல்லச் சிறார்களை ஒழுக்கமுடனும், சிறந்த மனிதர்களாகவும், சமூக அக்கறை உள்ளவர்களாகவும் மாற்றும் பணியைச் செய்து வரும் அரசு அலுவலர்கள் மத்தியில், வெண்மை இதழும் அதில் பங்கு வகிக்கிறது.

உலகில் வாழும் அனைத்து தமிழர்களும் வெண்மை இதழைச் சந்தா செலுத்திப் படித்துப் பயன்பெற வேண்டும்.

*– திருமதி. அ.ஆரோக்கிய மேரி, M.L.,*
*உறுப்பினர், இளைஞர் நீதிக்குழுமம்,*
*திருநெல்வேலி.*

# ஈடுபாடே உங்கள் அடையாளம்!

செயல்களே ஒவ்வொருவருக்கும் அடையாளம் தருகின்றன. விமானம் ஓட்டும் ஒருவரின் பெயர் யாருக்கும் தெரியாவிட்டாலும்கூட, அவரை 'பைலட்' என்று செய்யும் தொழிலை வைத்தே அழைக்கிறனர். கார் ஓட்டினால் டிரைவர், சமையல் செய்தால் சமையல்காரர், ஒரு நிறுவனத்தின் நிர்வாகியாக இருந்தால் மேனேஜிங் டைரக்டர் என்று பலருக்கும் அவர்கள் செய்யும் வேலையே அடையாளமாக மாறுகின்றன.

அந்த வேலையில் நாம் காட்டும் ஈடுபாடே, நம்மை மிகச் சிறந்தவராக மாற்றுகிறது. 'இவரைப் போல மிகச் சிறந்த பிரியாணியைத் தயாரிப்பவரை இந்த நகரத்திலேயே பார்க்க முடியாது' என்று ஒருவரைக் குறிப்பிட்டால், அது அவரின் ஈடுபாட்டை உணர்த்தும் புகழுரை. 'நாம் செய்யும் உணவு மற்ற எல்லோரும் செய்வதைவிடச் சிறப்பாக இருக்க வேண்டும். அதை உண்பவரின் வயிறும் மனமும் நிறைய வேண்டும்' என்று ஈடுபாடும் ஆர்வமும் காட்டி அவர் சமைப்பதால்தான் இந்தப் பெருமைக்குரிய அடையாளம் கிடைக்கிறது.

ஆர்வமும் ஈடுபாடும் ஆழ்மனத்திலிருந்து வருவது. செயற்கையாக அவற்றை உருவாக்க முடியாது. அப்படிச் செய்வது, நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் செயல். உண்மையாக உங்களுக்கு ஆர்வம் இருக்கும் ஒரு விஷயத்தில் திறமையை வளர்த்துக்கொண்டு, ஈடுபாடு காட்டி உழைத்தால், உங்களால் அடைய முடியாதது என்று இந்த உலகில் எதுவும் இல்லை.

ஆர்வம் வேறு எதிலோ இருந்து, சம்பந்தமே இல்லாத இன்னொரு விஷயத்தில் ஈடுபாடு காட்டினாலும் பலன் இருக்காது. இதுபற்றி ஒரு கதை உண்டு. கணவரை இழந்த ஒரு பெண்ணும், மனைவியை இழந்த ஓர் ஆணும் இருந்தனர். இருவரும் பரஸ்பர சம்மதத்துடன் மறுமணம் செய்துகொண்டனர். அந்தப்பெண்ணுக்கு ஒரு மகள் இருந்தாள். அந்த ஆணுக்கு ஒரு மகன் இருந்தான். 'இரண்டு குழந்தைகளையுமே தங்கள் குழந்தைகளாக வளர்க்க வேண்டும், வேறு குழந்தைகள் வேண்டாம்' என இருவரும் இணைந்து முடிவெடுத்தனர்.

'தாயன்பு இல்லாமல் வளரும் தன் கணவனின் மகன் ஏங்கிவிடக் கூடாது' என்று நினைத்த அவர், தன் மகளைவிட அந்த ஆண் குழந்தை மீது அதிக அக்கறை காட்டினார். ஆனாலும், அவரது மகள் போல அவன் உற்சாகமாக இல்லை, சரியாக விளையாடவும் இல்லை, நன்கு படிக்கவும் இல்லை. என்ன காரணம் என்று தந்தைக்கும் புரியவில்லை.

ஒருநாள் இரவில் அவர் வீட்டில் உட்கார்ந்து தன் அலுவலக வேலைகளை முடித்துவிட்டுத் தாமதமாகத் தூங்கச் சென்றபோது அதற்கான காரணம் புரிந்தது. அந்தப் பெண் தன் கணவனின் மகனை அருகில் போட்டுக்கொண்டு படுத்திருந்தார். ஆனால், சற்று தூரத்திலிருந்த தன் மகள் தூக்கத்தில் இருமியபோது, தன்னையும் அறியாமல் அவரது கரங்கள் நீண்டு மகளை அரவணைத்தன. 'என்னதான் தன் மகன் மீது மனைவி அக்கறை காட்டினாலும், அவளின் உள்ளன்பு தன் மகள் மீதே இருக்கிறது. அதேபோலத் தன் மகன் மீது தான் உள்ளன்பைக் காட்டினால்தான் அவனை இனிமையாக வளர்க்க முடியும்' என்பதை தந்தை உணர்ந்தார். உண்மையான ஈடுபாட்டை மறைக்க முடியாது.



அதே சமயத்தில், உங்களுக்கு ஈடுபாடு இருக்கும் ஒரு விஷயத்தில் நீங்கள் உயர்வு பெறுவதை யாராலும் தடுக்க முடியாது. இதுதொடர்பாக இன்னொரு கதை சொல்லப்படுவதுண்டு. ஒரு கிராமத்தில் புதிதாக ஆலயம் கட்டும் பணி நடந்துகொண்டிருந்தது. ஊரில் எல்லோரும் அதற்காகத் தங்களிடம் இருக்கும் சேமிப்பைக் கொடுத்தனர். அந்தக் கிராமத்திலேயே மிக ஏழையாக இருக்கும் ஒருவன், தன்னிடம் இருந்த மொத்தச் சேமிப்பையும் கொடுத்தான். ஊரிலேயே மிகப்பெரிய பணக்காரர், 'என்னால் முடிந்ததைத் தருகிறேன்' என்று தன் சேமிப்பிலிருந்து ஒரு பகுதியைக் கொடுத்தார். அவர் கொடுத்தது சில லட்சங்கள், அந்த ஏழை கொடுத்தது ஆயிரம் ரூபாய்கூட இல்லை.



இருவரும் ஒரே நாளில் மறைந்து சொர்க்கத்துக்குச் சென்றனர். அந்த ஏழையைச் சொர்க்கத்தின் வாசலில் தேவதூதர்கள் திரண்டுவந்து மாலை அணிவித்து மரியாதைசெய்து அழைத்துச்சென்றனர். பணக்காரரையோ சாதாரணமாக வாசல் கதவுகளைத் திறந்து உள்ளே கூப்பிட்டனர். அவருக்குக் கடும் கோபம். "கடவுளே, உனக்குக் கோயில் கட்ட நான் அத்தனை லட்சங்கள் கொடுத்தேன். அவன் ஆயிரம் ரூபாய்கூடத் தரவில்லை. அவனுக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கிறீர்கள், என்னை அவமானப்படுத்துகிறீர்களே' என்று கோபத்துடன் கேட்டான்.

கடவுள் சிரித்தபடி அவனுக்கு, ''அந்த ஏழை தன்னிடம் இருந்த மொத்தச் சேமிப்பையும் கொடுத்தான். கோயிலுக்காகத் தன்னிடம் இருக்கும் எல்லாவற்றையும் கொடுக்க வேண்டும் என்ற ஈடுபாடு அவனுக்கு இருந்தது. ஆனால், நீ உன்னிடம் இருப்பதில் ஒரு பகுதியைத்தானே கோயிலுக்குக் கொடுத்தாய். 'ஊரிலேயே எல்லோரையும்விட அதிகம் கொடுத்தவன்' என்ற பெருமைக்காகவே அதைச் செய்தாய். மற்றபடி உனக்கு பக்தியோ, ஈடுபாடோ இல்லையே" என்று பதில் சொன்னார்.

எதில் ஈடுபாடு இருக்கிறதோ, அதைச் செய்வதன் மூலம்தான் நமக்குச் சிறந்த பலன்கள் கிடைக்கின்றன. ஈடுபாட்டுடன் உழைக்கும் மனிதர்களிடம் சில பொதுவான பண்புகள் இருக்கின்றன.


- தங்கள் உள்ளுணர்வு வழிநடத்தும் பாதையில் போகிறோம், மனம் சொல்வதைச் செய்கிறோம் என்ற பரவச உணர்வு அவர்களுக்கு இருக்கும். ஒவ்வொரு நிமிடமும் தாங்கள் செய்யும் வேலையை ரசித்து உற்சாகத்துடன் செய்வார்கள்.

- அவர்களிடம் துணிச்சல் இருக்கும். துணிவு என்பது, உடலைக் கட்டுறுதியுடன் வைத்துக்கொண்டுஎல்லோரிடமும் சண்டை போடுவது அல்ல. 'இதில் நம்மால் ஜெயிக்க முடியும்' என்று நம்பும் ஒரு விஷயத்தை மன உறுதியுடன் செய்வதற்கும், எத்தனை பிரச்னைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு முன்னேறுவதற்கும் துணிச்சல் தேவைப்படுகிறது. மற்றவர்கள் சந்தேகப்பட்டாலும், எதிராகப் பேசினாலும், அதையெல்லாம் அலட்சியம் செய்துவிட்டுத் தங்கள் வேலையில் குறியாக இருப்பதற்கும் துணிவு தேவை.

- ஈடுபாடும் ஆர்வமும் திறமையும் இருக்கும் ஒரு துறையில் மற்றவர்களைத் தாண்டி முதலிடம் பிடிப்பதற்கு மன உறுதி நிச்சயம் தேவை. தயக்கமே இல்லாமல் முடிவுகள் எடுத்து, வித்தியாசமாக யோசித்துப் புதுமைகள் செய்து அதை அடைய வேண்டும்.

- எப்போதும் மனம் நேர்மறையாகச் சிந்திக்க வேண்டும். எப்படிப்பட்ட பிரச்னைகளை எதிர்கொண்டாலும், பயந்து பின்வாங்காமல் தெளிவாகத் திட்டமிட்டு மேலே செல்வதற்கு இப்படிப்பட்ட மனநிலையே உதவும்.

# எதில் உங்களுக்கு ஈடுபாடு?



'வாழ்க்கையில் நாம் என்னவாக ஆக வேண்டும்' என்பது குறித்து ஒவ்வொருவருக்கும் கனவு இருக்கும். ஈடுபாட்டுடன் முயற்சி செய்தால், அதைக் கண்டிப்பாக அடைந்துவிடலாம். இதுகுறித்துப் பல கற்பனைகள் நிலவுகின்றன. 'ஒருவருக்கு ஒரே ஒரு கனவுதான் இருக்க முடியும்' என்பது அப்படிப்பட்ட ஒரு கற்பனை.

அது உண்மையல்ல! ஒவ்வொரு பருவத்திலும், ஒவ்வொரு சூழலிலும் கனவுகள் மாறிக்கொண்டே இருக்கும். சிறுவயதில் ஒருவிதமாக நாம் காணும் கனவு, அனுபவங்கள் கூடக்கூட மாறிவிடும். ஆர்வமும் திறமையும் வேறு வேறானவை. ஒருவருக்கு விமானம் ஓட்ட வேண்டும் என்று ஆர்வம் இருக்கலாம். ஆனால், அவருக்கு கட்டட வடிவமைப்பில் திறமை இருந்தால், வடிவமைப்பாளராக மாறுவதுதான் சுலபம். கிரிக்கெட் வேகப்பந்து வீச்சாளராக ஆக வேண்டும் என்ற ஆர்வத்துடன் மைதானத்துக்கு வந்தவர் சச்சின் டெண்டுல்கர். ஆனால், அவருக்கு பேட்டிங் செய்வதில் அபூர்வ திறமை இருந்தது. அதைப் பயிற்சியாளர் கண்டுபிடித்துச் சொல்லி அந்தத் திறமையை மெருகேற்றிக் கொண்டதால், உலகின் தலைசிறந்த பேட்ஸ்மேன் ஆனார் அவர்.

இப்படி தங்கள் ஆர்வத்தையும் திறமையையும் பிரித்துப் பார்க்க முடிந்தால், உங்களால் உங்கள் கனவுகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும். அவற்றை அடைவதற்கான பாதையையும் தீர்மானிக்க முடியும். வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நிறைவும், நம் கனவுகளையும் இலக்குகளையும் அடைவதில்தான் கிடைக்கின்றன.

வாழ்க்கையின் லட்சியமாகவும் கனவாகவும் இலக்காகவும் கருதும் ஒரு செயலை நீங்கள் எப்படி அடையாளம் காண முடியும்?

- ஏதேனும் பொழுதுபோக்கைச் செய்யும்போது கிடைக்கும் அதே அளவு மகிழ்ச்சி, உங்கள் வேலையைச் செய்யும்போதும் உங்களுக்குக் கிடைக்கும்.
- அந்தச் செயலை உற்சாகமாகவும் பரவசத்துடனும் செய்வீர்கள்.
- அதிகாலையில் அலாரம் அடிப்பதற்கு முன்பே எழுந்துவிடுவீர்கள். அந்த நாளில் செய்யப்போகும் வேலையை நினைத்து அப்போதே உற்சாகம் பெருகும்.
- படுக்கையில் படுத்திருப்பது, ஊர் சுற்றுவது, நண்பர்களுடன் அரட்டை அடிப்பது ஆகியவற்றைவிட வேலை செய்வதே உங்களுக்கு அதிக மகிழ்ச்சி கொடுக்கும்.
- தினமும் வேலைக்கு உற்சாகமாகச் செல்வீர்கள். 'ஏன்தான் இதைச் செய்கிறோமோ' என்ற அலுப்பு இருக்காது. ஞாயிறு விடுமுறை முடிந்து திங்கள்கிழமைகளில் வழக்கமாகப் பலருக்கு ஏற்படும் எரிச்சலும் வராது.
- வேலை செய்ய இறங்கிவிட்டால், நேரம் போவதையே மறந்துவிடுவீர்கள்.
- உங்கள் செயலில் சிறிதாகக் கிடைக்கும் ஒரு முன்னேற்றத்தையும் பெரிய சாதனையாக எண்ணி சந்தோஷம் அடைவீர்கள்.
- எப்படிப்பட்ட பிரச்னைகளை எதிர்கொண்டாலும், மோசமான தோல்விகளைச் சந்தித்தாலும், நீங்கள் செய்யும் செயலிலிருந்து ஒரு அடிகூடப் பின்வாங்க மாட்டீர்கள்.
- 'இதைச் செய்வதற்குப் பதிலாக வேறு ஏதாவது வேலை பார்க்கலாம்' என்ற எண்ணம் எப்போதும் மனத்தில் தலைதூக்காது.
- இந்தச் செயலைச் செய்வதன் மூலம் எவ்வளவு பணம் சம்பாதிக்கலாம், எந்த அளவுக்குப் புகழை அடையலாம் என்றெல்லாம் திட்டமிட மாட்டீர்கள். 'நம் செயலை நேர்த்தியாகச் செய்ய வேண்டும்' என்று மட்டுமே நினைப்பீர்கள். அதுவே உங்களுக்கு எல்லாவற்றையும் சம்பாதித்துக் கொடுக்கும்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


Feel Like A Champion. Inside!
There is a champion within you. Unleash your true potential with lasting comfort & confidence from within, with Ramraj Banians
Inners for Winners
RAMRAJ
BANIANS
SCAN QR CODE FOR STORE LOCATION
Shreyas Iyer - Cricketer
SUKRA
Super Fine Banians
ROMEX
Supreme Banians
RISE-UP
Premium Banians
ARCHERY
Gym Vest
COMPACT
Flexible Rib Vest
ACOSTE
BANIANS | BRIEF | TRUNKS
Available @ Ramraj Showrooms & All Leading Textile Shops | Shop Online @ www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-07-2023. Posted at Tirupur BPC on 5th of every month.

